# மாணவர் விடியல்

மலர் : 22 தை - மாசி : 2007

இயேசு சபை அகதிப்பணி, 31, கிளிபர்ட் பிளேஸ், கொழும்பு – 04. தொலைபேசி : 2504384

## தொலைக்காட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரமும் கைப்பழக்கம்


வி. டிலானி
பிள்ளையார்பிட்டி


அ. மேரிசஜிந்தா
சிலாவத்தை



தெ. றெபேக்கா
பெரியகுளம்


ம. மயூரன்
முல்லைத்தீவு


ஞா. மரியசெபஸ்ரின்
சாளம்பன்


K. விஜிகலா
வேப்பவெட்டுவான்


தி. அர்ச்சனா
மூதூர்


ர. துதர்சன்
இராசேந்திரகுளம்


சி. ஆனந்தி
பிள்ளையார்பிட்டி




சு. சுதர்சன்
புதுக்குடியிருப்பு


L. நிரோமி
மூதூர்



N. தனுஜா
குறும்பிட்டி


ச. லக்ஷன்


நே. கெஷ்மியா
குறும்பிட்டி


மு. ரிஷபனா
குறும்பிட்டி



N. சுதுஷன்
குறும்பிட்டி


T. விதுஜா
சீனன்குடா


அ. சுதர்சினி
கண்டல்


க. மரியதர்சினி
கல்லடி


லோ. மேரிமதுஷா
வவுனியா


த. தனுசியா
வன்னிகுளம்


த. லக்ஷனா
சாம்பல் தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்புத் தம்பி தங்கைகளே...*

இயேசு சபை அகதிப் பணியினரின் அன்பும் இறைவாழ்த்தும்!

டெலிவிஷன் - சினிமா நம் வாழ்க்கையினையே மாற்றியமைத்து விட்டது. கற்பனையில் நிஜமில்லாத உலகில் நாம் வாழக்கற்றுக் கொண்டுவிட்டோம். பொழுது போக்கு வாழ்க்கையாகிவிட்டது. மனம் ஆக்க சக்தியை இழந்து களங்கப்படுத்தப்பட்டு விட்டது. சிந்தனை அசை போடும் விடயமாக நடிக, நடிகைகளும், விளம்பரங்களும் மாறி விட்டது.

படைப்புத்திறன், சுதந்திரம், தன்முயற்சி ஆகிய பல விடயங்களை தாக்கும் புற்று நோய் போல் டெலிவிஷன் சினிமா செயல் பட்டுக்கொண்டு இருக்கின்றது. சமுதாயத்தை அதன் போக்குகளை உருவாக்கும் சக்தியாக மாற்றி விட்டது. மனித பிரச்சனைகளுக்கு ஏமாளித் தனமான தீர்வுகள் டெலிவிஷன் சினிமாவில் கிடைக்கின்றன. வன்முறை சக்தி வாய்ந்ததாக ஏற்று கொள்ளப்பட்ட விடயமாகி விட்டது.

மனித வாழ்க்கையில் செக்ஸ் தவிர வேறு எதுவுமே இல்லை என்கின்ற பிரமை ஏற்படுத்தப்பட்டு விட்டது. காமம், பேராசை, மாற்றான் மனைவியுடன் உறவு போன்ற காரியங்களை நியாயப்படுத்தும் கதைகளும் சம்பவங்களும் மலிந்துவிட்டன. பொய்யான மாய உலகத்தை சிருஷ்டித்து இது தான் உலகம் என்று சினிமாவும் டெலிவிஸனும் நம்மை நம்ப வைத்துக் கொண்டிருக்கின்றது. குற்றம் வன்முறை அர்த்தமற்ற வாழ்க்கை இவை தான் உலகம் இவை தவிர வேறு இல்லை என்கின்ற ஒரு நம்பிக்கையினை நம்மிடம் ஏற்படுத்திக் கொண்டும் இருக்கின்றது.

இந்த பாதிப்புக்களால் மக்களும் தாங்கள் வாழுகின்ற சூழ்நிலையை தவறாக கணிப்பு செய்து கொண்டிருக்கின்றார்கள். இதன் வழியாக மக்களின் சிந்தனையுடன் நடவடிக்கைகளும் பெருமளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கின்றன. கடந்த சில ஆண்டுகளில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி புதிய தலைமுறையிடம் சொல் ஆற்றல் செயல் ஆற்றல் குறைந்து போய் இருக்கின்றது. கணிதத் திறமைகள் வெகுவாக சரிந்துவிட்டது. மனிதர்கள் சராசரி தரத்திற்கும் கீழே போய்க் கொண்டு இருக்கின்றார்கள். சாதனை புரியும் உற்சாகம் குறைந்து கொண்டிருக்கின்றது. மனித ஆற்றலை வளர்த்துக்கொள்ள டெலிவிஷன் எந்த விதத்திலும் துணை செய்யவில்லை.

நேரத்தை கொல்லும் உபகரணமாகவே இது வளர்ந்து வருகின்றது. பெற முடியாத பொன்னான நேரத்தை அது தடை செய்து கொண்டிருக்கின்றது. குடும்ப உறவுகளை தகர்க்கின்ற, மனிதர்களை குடும்பத்தில் அன்பில்லாமல் மாற்றுகின்ற மாபெரும் சக்தியாக டெலிவிஷன் மாறுகின்றது.

பிஞ்சு நெஞ்சங்களின் மனதில் வக்கிர புத்தியை தூண்டும் சக்தியாக மாறுகின்றது. டி.வி. விளம்பரங்கள் மூலம் நம்முடைய சிந்தனையை ஒரு குறிப்பிட்ட நிறுவனம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்கின்றது. சுயமாக சிந்தித்து நமக்கு தேவையான பாதையை நாமே வகுத்துக் கொள்ளாமல் மற்றவர்கள் உருவாக்கிய பாதையில் நம்மை நடக்க செய்கின்றது.

இது யதார்த்தத்தின் ஒரு பாகம் இதில் மற்றொரு பக்கமும் இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இன்று உலகையே ஒரு கிராமமாக டெலிவிஷன் மாற்றியமைத்து விட்டது. உலகில் எந்த திசையிலும் என்ன நடந்தாலும் அதை உடனடியாக பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. மனிதனின் அறிவியல் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது. மனிதன் நேரடியாக கண்டு இரசிக்க முடியாதவற்றை நம் கண் முன்னே கொண்டு வந்து நம்மை மகிழ்விக்கின்றது. இப்படி எத்தனையோ நேர்மறையான விமர்சனங்களை நாம் முன் வைக்கலாம்.

ஆனால் மாணவர்களாகிய நாம் டெலிவிஷனை எப்படி பயன்படுத்துகின்றோம் என்பதில் தான் டெலிவிஷன் நமக்கு நன்மையைத் தருகின்றதா? அல்லது தீமையை விளைவிக்கின்றதா? என்பதை முடிவு செய்ய முடியும்.

பெரும்பாலும் இன்றைய கால கட்டத்தில் டெலிவிஷன் மாணவர்களின் கல்வி வாழ்க்கைக்கு இடையூறாகவே கருதப்படுகின்றது.

மாணவர் விடியலுக்கான 23வது தலைப்பு **புதுவருடம் புது வாழ்வு** இது குறித்து உங்களுடைய ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். மாசி மாதம் 5ம் திகதிக்கு முன்னதாக ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

*பிறந்திருக்கும் பாலகனைப் போல்*
*தூய உள்ளத்தவராய் வாழ்ந்திடவும்,*
*புதிய ஆண்டில் புத்துயிர் பெற்ற*
*நல் மனத்தவராய் சமாதானத்தில்,*
*நிறைவான வாழ்வு வாழவும்*
**JRS** சார்பாக நல் வாழ்த்துக்கள்!
*Merry Christmas*
*&*
*Happy New Year*

அன்புடன்,


**Fr. வின்னி ஜோசப்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சி

நாட்டினிலே நடப்பதையெல்லாம்
நல்ல பல செய்திகளாய்
வீட்டினிலே காட்டிவிடும்
விந்தையான பெட்டியது!



தொலைதூரக் காட்சியெல்லாம்
தொடுந்தூரம் தெரியவைக்கும்!
அலை கடலைத்தாண்டி ஒளி
அலைகளால் அறிய வைக்கும்!

விண்வெளியில் நடப்பவரை
வீட்டிற்கே கொண்டு வந்து
கண் எதிரே காட்டிவிடும்,
களிப்படையச் செய்துவிடும்!

வீட்டினுள்ளே திரையரங்கம்!
வீடெல்லாம் கலை முழங்கும்
ஏட்டிலுள்ள கல்வியெல்லாம்
எதிரிலே எளிதிலே காட்டிவிடும்.

**பே. ஹர்சனா,** கந்தளாய். (JRS மாணவி)

## தொலைக்காட்சியே!

உலகத்தை உள்ளங்கையில் வைத்து
உண்மைகளை உயிராய் மதித்து
உலகப் பந்தின் உச்சியில் ஆழமான தீபமாய்
மக்களின் மனதை மதித்து உரிமை காட்டும்
தொலைக்காட்சியே!
நீயோ, கண்டத்தைச் சுருக்கினாய்
நிஜத்தை நிழலாக்கினாய்
ஆராய்ச்சியை அதிகரித்தாய்
அனர்த்தத்தை சுட்டிக்காட்டினாய்
தொலைதூர நிலவைத் தொட வைத்த
தொலைக்காட்சியே!
உலகெங்கும் தொடரட்டும்
தொடர்ந்தும் உன் பணி..



**நஜாத்,** கிண்ணியா.


## விடுதலை கொடு

நீ என் வீட்டில் இல்லாத போது
உனக்காக ஏங்கித் தவித்தேன்
அப்போது எனக்கு தெரியவில்லை!
நீ என்னை ஆட்டிப் படைக்கப் போகும்
பேய் என்று!
இப்போது தான் உணர்கின்றேன்
என் நேரத்தை வீண் அடித்தாய்
என் உழைப்பை உறிஞ்சினாய்
உன்னில் இருந்து எனக்கு
எப்போது விடுதலை தரப் போகின்றாய்?



**சபீனா,** பேசாலை


## புதுவரவுத் தொலைக்காட்சி



கடந்திட்ட காலத்தால்
இழந்தது ஏராளம்.
கண்ணுறங்கும் வேளையிலே,
கரம் பிடித்த மோதலும்!
கண் விழிக்கும் வேளையிலே,
கரைந்திட்ட சாதலும்!
கண்ணீரே ஆறாய்ப் ~ பெருகிட
கலைந்தது எம் வாழ்வு!

தொலை நாடுகளின் யுத்தத்தைத்
தொலைக் காட்சிகளில் கண்டிருப்போம்!
எம் நாட்டின் அவல நிலை
கண்முன்னே கண்டு கொண்டோம்!

நாட்டின் நலம் பார்க்க
தொலைக் காட்சி பார்க்கும் ~ போது
நானிலம் நல்கிட இக் காட்சி
கை கொடுக்கும் என்றெண்ணி,
கண்களைத் துடைத்து விட்டு
கண்ணயரத் தூங்கும் வேளை,
கல் வெடிப்பது போல் ~ சத்தம்
வெடிக்கின்றது தலைக்கு மேலே!




நன்மை தீமை அறிய
வழி வகுக்கும் தொலைக்காட்சியில்
புது வரவுகள் வந்தாலும்,
இறைவன் தானே ~ எம்
வழி காட்டி!

**யு.நிரஞ்சலா,** இருதயபுரம்.

## என் ஆசை தொலைக்காட்சியே!

தொலைக்காட்சி நம் மனதை
தொட்டுச் செல்வது மட்டுமல்ல,
அனுதின உலக செயற்பாடுகளை
எடுத்தியம்பும் புதுமையான ஒலி, ஒளி பேழை.

தொலைக் காட்சியே!
நீ காட்டும் அதிசய செயல்களால்,
நாம் பெற்ற பயன்களோ பல
இது உன்னுடைய உயர் செயலே!



உன் செயலால் மகிழ்வுறும்
என்னை ஊக்கப்படுத்த
இன்னும் பல விந்தைகள் செய்வாயோ?
என் ஆசை தொலைக்காட்சியே!

**க.லிங்கேஸ்வரி,** இருதயபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு தாக்கத்திற்கும் மறு தாக்கம் இருப்பது போல எந்தச் செயலிலும், பொருளிலும் விளைவுகள் காணப்படுகின்றன. அவ்வாறே நம் வீட்டு தொலைக்காட்சிப் பெட்டியாலும் விளைவுகள் ஏற்படுகின்றது. விளைவு என்பது நன்மையையும் தீமையையும் அடக்கியுள்ளது. எனவே தொலைக்காட்சியின் மூலம் நாம் பெறும் நன்மைகளை முதலில் ஆராய்வோம்.

இனி தீமையான விளைவினை பார்ப்போமேயானால் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும் ஒழுங்கீன, தீய பார்க்கத்தகாத காட்சிகளால் பலர் பாதிப் படைகின்றனர். சில விளம்பர நோக்கத்திற்காக காண்பிக்கபடும் தவறான வழிகாட்டல்கள், சமுதாயத்திற்கு ஒத்துவராத நோய்களை உருவாக்ககூடிய மதுபான, சிகரெட் விளம்பரங்கள்

என திட்டமிட்டறிந்து குறிப்பிட்ட பயனுள்ள நிகழ்ச்சிகளை பார்ப்பது மிக்க நன்று.

நாம் பாடசாலை மாணவராய் இருந்தால் நம் நேரத்தை வீணடிக்கும் நிகழ்ச்சிகளை தவிர்த்து விட்டு கல்வி புகட்டும் அம்சங்களை பார்த்து பயனடையும் போது தொலைக்காட்சி என்பது தொல்லைக்காட்சியாக மாறாது பயனுள்ளதாக அமையும்.

**ஜென்சி,** களிமோட்டை.

# தொலைக்காட்சி பற்றிய ஓர் கண்ணோட்டம்

தொலைக்காட்சி நமக்கு கல்வி புகட்டும் சிறந்த சாதனமாக விளங்குகின்றது. இதன் வழியாக எம்மால் நேரில் சென்று பார்க்க முடியாத பலவற்றை வீட்டில் இருந்தே பார்த்து விடுகின்றோம். அத்தோடு வெப்பமண்டலக் காடுகள், வெண்பனி மூடிய துருவ பிரதேசங்கள், மலைச் சிகரங்கள், ஆழ்கடல் அதிசயங்கள், ஆகாய மண்டலம், பிரமிப்பூட்டுகின்ற நட்சத்திரங்கள், விதம் விதமான பறவைகள், மிருகங்கள் கடல்வாழ் உயிரினங்கள் என எல்லாவற்றையும் இருந்த இடத்திலிருந்தே பார்த்து அதிசயிக்கின்றோம்.

இன்னும் வெவ்வேறு வகையான மக்கள் இனத்தையும் அவர்களின் பழக்க வழக்கங்களையும், கலை, கலாசாரம், வரலாறு, அரசியல், சாதனைகள், பல்வேறு வகையான விளையாட்டுக்கள், நடப்புச் செய்திகள், மக்களின் அவல நிலை போன்ற பல விடயங்களை பார்க்கக் கூடியதாக உள்ளது. எனவே தொலைக்காட்சி எமது பொழுது போக்கு சாதனமாகவும், மகிழ்விக்கும் ஊடகமாகவும் இருப்பதோடு மட்டுமல்லாது, பலவாறு கல்வியையும் புகட்டுகின்றது.

போன்றன பல மக்கள் கெட்டுச் சீரழிய காரணமாக இருக்கின்றன. சில சிறார்கள் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் வீர விளையாட்டுகளை பார்த்து தாமும் செய்யவெண்ணி தமது உயிரைக்கூட மாய்த்துக் கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

குழந்தைகள் சதா தொலைக்காட்சியை பார்க்கும் போது அவர்களுடைய உடல் வளர்ச்சி, திறமைகள், மற்றவர்களுடன் பழகும் வாய்ப்பு என்பன தடைப்படுவதாக அமெரிக்க அக்கடமி கூறுகின்றது. அத்தோடு மக்கள் தினமும் நான்கு மணி நேரம் தொலைக்காட்சி பார்த்து வந்தால் அறுபது வயதாகும் போது தமது பத்து வருடத்தை தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிட்டிருப்பார்கள்.

எனவே “நேரம் பொன்னானது” என்ற கூற்றுக்கு அமைய வீணாக நேரத்தை பயனற்ற காட்சிகளை பார்ப்பதில் செலவிடுவதை விட ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் எந்த நிகழ்ச்சி பயனுடையது

## வழிகாட்டும் தொலைக்காட்சி...

தூரத்து நிகழ்வுகளைத்
துல்லியமாய்க் காட்டும்!
வாரம் முழுதும் மகிழ்விக்கும்,
நேரம் போவது தெரியாமல்
நித்தமும் கண்காட்சி நினைவில்
பார்த்துவிட்டு,
தலைமைகள் விட்ட பிழைகளை
சுட்டிக்காட்டி!
விமர்சித்து கெட்ட செயல் நீக்கி,
கேடில்லா வாழ்வை
நிலை நிறுத்தும் சாதனமே!
எங்கேயோ நடப்பதை நம்
கண்ணெதிரினில் எளிதில் கொண்டு
வந்து தந்த களஞ்சியமே!
எந்த செயலிலும் திறம்பட முடிய
வழி காட்டும் தொலைக்காட்சி.

**மு.சஜன்,** டச்பார்.

உறக்கம் கலைந்து எழு!
சோம்பல் குகையை விட்டு
வெளியே வா!
அறிவொளியில் மூழ்கு!
சுதந்திரக் காற்றை சுவாசி!
இன்பச் சிறகடித்துப் பற!



செல்லின் உட்கருவைக் கண்டறிந்தவர் - இறாபர்ட் பிரவுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்படப் பாடல்
### (உங்கள் சிந்தனைக்கு)



உன்னால் முடியும் தம்பி, தம்பி
உனக்குள் இருக்கும் உன்னை நம்பி
உன்னால் முடியும் தம்பி, தம்பி – அட
உனக்குள் இருக்கும் உன்னை நம்பி
தோளை உயர்த்து,
தூங்கும் நாட்டை எழுப்பு – உன்
தோளை உயர்த்து,
தூங்கும் நாட்டை எழுப்பு
எதையும் முடிக்கும் இதயம் உன்னில் கண்டேன்!



நாளைய நாட்டில் தலைவனும் நீயே
நம்பிக்கை கொண்டு வருவாயே
உனக்கென ஓர் சரித்திரமே
எழுதும் காலம் உண்டு!

ஆகாய கங்கை காய்ந்தாலும் காயும்,
சாராய கங்கை காயாதடா!
ஆள்வோர்கள் போடும் சட்டங்கள் யாவும்
காசுள்ள பக்கம் பாயாதடா!
குடிச்சவன் போதையில் நிப்பான்
குடும்பத்தை வீதியில் வைப்பான்
தடுப்பது யாரென்று கொஞ்சம் நீ கேளடா!
கள்ளுக்கடை காசிலே தாண்டா
கட்சிக்கொடி ஏறுது போடா!
மண்ணோடு போகாமல் நம் நாடு திருந்த
செய்யணும்!

கல்லூரி பள்ளி இல்லாத ஊரை
கையோடு இன்றே தீ மூட்டுவோம்!
கல்லாத பேர்கள் இல்லாத நாடு
நம் நாடு என்றே நாம் மாற்றுவோம்!
இருக்கிற கோவில்கள் எல்லாம்
படிக்கின்ற பள்ளிகள் செய்வோம்!
அறிவெனும் கோபுரமங்கே நாம் காணுவோம்
வானம் உங்கள் கைகளில் உண்டு
ஞானம் உங்கள் நெஞ்சில் உண்டு
நான் என்று எண்ணாமல்
நாம் என்று உறவு கொள்ளணும்!

எழுதியனுப்பியவர்,
**அ. சுமி**, கற்கிடந்த குளம்.

நீ படி!
இது வாழ்வின் முதற்படி.
நீ படியாவிடில்,
வாழ்வது எப்படி?

## வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்

✤ விருப்பு வெறுப்புகள் காலத்தால் மாறக் கூடியவை. அதனால், இப்போதுள்ள விருப்பு வெறுப்புகளைப் பெரிதாக நினைக்க வேண்டாம்.

✤ உன் மனதிற்கு நல்லதென்று பட்டதை தைரியமாகச் சொல். அதற்கு மதிப்பு உண்டு.

✤ எது உண்மை என்று யாரிடமும் கேட்க வேண்டியதில்லை. அது உங்கள் மனசாட்சிக்குத் தெரியும்.

✤ வசதி இல்லாதவர்களுக்குக் கொடுப்பது தான் தர்மம். மற்றவை வியாபாரம்.

✤ சிந்திக்க மறந்து விடுவதால் தான் பல சிக்கல்கள் தோன்றுகின்றன.

✤ வெறுமையுடன் கோயிலுக்குச் செல்லுங்கள். எதைக் கேட்கவும் செல்ல வேண்டாம்.

✤ யாரிடத்திலும் எதையும் எதிர்பார்த்தல் இல்லையென்றால், வாழ்வில் ஏமாற்றமே இல்லை.

✤ பாதையைத் தேடிக் கண்டுகொள்ளுங்கள், கிடைக்காவிட்டால் நீங்களே ஒரு பாதையை வகுத்துவிடுங்கள்.

✤ இதயக் குருடுதான் குருடு. கண்ணில்லாமை குருடல்ல.

✤ இரண்டு விடயங்கள் அறிவுக்குப் பொருந்தாது. அவை பேச வேண்டிய போது பேசாதது, பேச வேண்டாத போது பேசுவது.

✤ ஒன்று உன் தோல்வியை ஒப்புக்கொள். இல்லையேல் அடுத்தவனது வெற்றியையாவது, ஒப்புக்கொள். அதுவும் இல்லையென்றால் நீ முட்டாள் என்று சொல்லப்படுவதையாவது ஒப்புக்கொள்.

✤ நிச்சயமாக அக்கம் பக்கம் பார்த்துத்தான் பேச வேண்டும். முடிந்தால் அடுத்த அறையையும் எட்டிப் பார்த்துவிட்டு!

✤ பயத்தில் பூச்சியும் பூதமாய்த் தெரியும். கவலையில் கடுகும் மலையாய்த் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி

நவீன தகவல் ஊடகங்களில் வந்துதித்த தலை சிறந்த ஊடகமே தொலைக்காட்சியாகும்.

இத் தொலைக்காட்சியால் மக்களடைந்த வியத்தகு நன்மைகள் ஏராளம். தொலைக்காட்சியின் பயன்பாட்டால் உலகம் சுருங்கி ஒரு சிறிய உருளையாகக் காணப்படுகின்றது. இன்று தொலைக்காட்சி பல்கிப் பெருகி பல வீடுகளையும் ஆக்கிரமித்துள்ளது.

இதனைக் கண்டுபிடித்த பெருமை திரு.ஜான் பெயர்டு என்னும் இங்கிலாந்து நாட்டு அறிவியலாளரையே சேரும். வானொலியோ செவிப்புலனுக்கு மாத்திரம் விருந்தளிக்கின்றது. கட்புலனையும் செவிப்புலனையும் இன்பத்தால் இயங்க வைக்கும் கருவியாக தொலைக்காட்சி செயற்படுகின்றது. கேட்டலை விட காண்பது மனதில் பசுமரத்தாணி போல பதியச் செய்யும்.

நிகழ்ச்சிகளைப் படமாக்கி அவற்றினை மின் காந்த அலைகளாக மாற்றி உயரமான "ட்ரான்ஸ்மீட்டர்" வாயிலாக வானில் பரவ விடுகின்றார்கள். ஒலியையும் அவ்வாறே மின் காந்த அலைகளாக்கி வானவெளியில் பரப்புகின்றார்கள். அவை ஒரு கணப்பொழுதிலே எங்கும் பரவுகின்றது. வானவெளியில் பரவியுள்ள அந்த அலைகளை தொலைக்காட்சிப் பெட்டியில் காணப்படும் நுண்ணிய இலத்திரனியல் கருவிகள், அன்டனா என்பவற்றின் உதவியால் மீண்டும் ஒளி ஒலியாக தொலைக்காட்சிப் பெட்டியில் காண்கிறோம்.

பல்வேறுபட்ட நாடுகள், பன்னாட்டுக் கலாசாரங்கள், வரலாற்றுப் புகழ் மிக்க இடங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள், அன்றாட வாழ்வில் இடம்பெறும் மாற்றங்கள், எழிலரங்கள், இயற்கையில் சீற்றங்கள், எதிர்வு கூறல்கள், எச்சரிக்கைகள் போன்றவைகளை அறிதல் என்பன தொலைக்காட்சி மூலம் பெற்ற பலன்களில் சிலவாகும்.

பொழுதுபோக்கு சாதனங்களில் தொலைக்காட்சியே முதன்மை வகிக்கின்றது. இது தனித்து பொழுது போக்கு சாதனமாகவன்றி மக்களின் அறிவுப் பெருக்கத்திற்கும் பெரிதும் வழி அமைத்துத் தருகின்றது. பெருந்தொகை பணத்தை செலவிடாமல் சிறியதொரு பெட்டியின் உதவியுடன் பல வியத்தகு செய்திகளை நம் அறிவுக்கண் முன் நிறுத்த முடிகின்றது.

மருத்துவம், விவசாயம், கைத்தொழில், சுற்றுலா, கலை, வணிகம் போன்ற பல பிரிவுகளில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதால் பல்வேறு துறைகளை சார்ந்த வியாபாரிகள் தமது விற்பனை பொருட்களை சந்தைப்படுத்த தொலைக்காட்சியில் விளம்பரம் செய்யும் யுக்தியைக் கையாளுகின்றனர். மொத்தத்தில் முழு உலகத்தையே நம் வீட்டில் இருந்தவாறே கண்டு மகிழ தொலைக்காட்சி உறுதுணையாக அமைகின்றது.

மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்வதற்கு பிரத்தியேகமாக பல நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களை நெறிப்படுத்த அனுபவம் மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் பல நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படுகின்றன. அது மட்டுமல்ல ஆளுமையையும் வளர்க்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன.

மனித கண்டுபிடிப்புக்களின் விளைவுகளில் நன்மை, தீமையென இரு அச்சாணிகள் உள்ளன. சில அர்த்தமற்ற நிகழ்ச்சிகளால் நேரம் வீணடிக்கப்படுகின்றது. சில பிழையான செய்கை விளக்கங்கள் பலர் வாழ்வுக்கு சவாலாகவும் அமைந்துள்ளது. மிக அருகிலிருந்து குறைந்தளவு வெளிச்சத்தில் தொலைக்காட்சியை பார்ப்பதனால் விழி கோளாறுகளும் ஏற்படுகின்றன.

எந்நேரமும் தொலைக்காட்சி முன்னால் இருப்பதை தவிர்த்து அதன் முக்கியத்துவம் அறிந்து செயற்பட்டால் நிச்சயமாக தொலைக்காட்சி தொல்லைக்காட்சியாக மாறாது என்பது திண்ணம்.

## தொலைக்காட்சியே அழிவைத் தராதே நீ !

தொலைவில் என்ன நடந்தாலும் – அதை
என் வீட்டுப் பெட்டி சொல்லும்!
நாடகத்தைப் பார்த்து அழுது – எம்
பிள்ளைகளுக்கு சோறு போட மறந்தோம்!
தொலைக்காட்சியே தஞ்சமென – நாம்
தெய்வத்தையே மறந்து வாழ்ந்தோம்!
சாதனைகளைப் பார்த்த எம் – சிறார்கள்
சாதிக்க நினைத்து மடிந்து போனதுண்டு!
தொலைக்காட்சியே அழிவைத் தராதே நீ!
எம் வெற்றிக்கு உந்து சக்தியாக இரு நீ!

அ.நேர்த்திராஜ், சாளம்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியும் பயன்களும்.

இன்றைய உலகில் தொடர்பாடல் சாதனங்களுள் தொலைக்காட்சி முதன்மை பெறுகின்றது. இதில் பலதரப்பட்ட வயதினரும் விரும்பி இரசிக்கத்தக்க வகையில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. வயதுப் பிரிவினர்களுக்கு ஏற்ப வெவ்வேறு இனிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றது.

சிலர் கூறுவார்கள் தொலைக்காட்சியைப் பார்த்து இளம் சமுதாயம் சீரழிந்து போகின்றது என்று. ஆனால் தொலைக்காட்சி பார்ப்பதனால் பல நன்மையான விளைவுகளும், சில தீமையான விளைவுகளும் ஏற்படுகின்றன. நாம் எமக்குத் தேவையான நல்ல விடயத்தை மட்டுமே கருத்தில் எடுத்து செயற்பட வேண்டும்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளான பட்டிமன்றம், விவாதம், கார்ட்டுன் போன்றவற்றால் மாணவ சமுதாயம் பெரிதும் பயன் பெறுகின்றது. காலை வேளையில் ஒளிபரப்பப்படும் "நற்சிந்தனைகள்" மூலம் அன்பு, பண்பு, நட்பு, கல்வி, நல்லவை எனப் பலவிதமான நல்ல கருத்துக்களை நாம் அறிய கூடியதாகவுள்ளது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்ற கல்வி நிகழ்ச்சிகள் மாணவ உலகத்திற்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். மிகப் பயன்பாடுள்ள அதே வேளையில் மனம் விரும்பி இரசித்துப் பார்க்கக் கூடியதாகவும் உள்ள நிகழ்ச்சிகளை நாம் விரும்பி பெரிதும் வரவேற்கின்றோம்.

**5ம் தர மாணவர்கள்,** தம்பலகாமம்.

## தொலைத் தொடர்பு சாதனம்



தொலைத் தொடர்பு சாதனமாம்
தொலைக் காட்சிப் பெட்டி இதாம்!
தொலை தூர விடயமதை
உடனுக்குடன் காட்சியுடன் காட்டிடும்
உன்னதமான பெட்டியதாம்!
படம் பார்த்து இரசித்திடவும்,
பல தகவல் அறிந்திடவும்
பயனுள்ள சாதனமாம்!
பாலர் விரும்பும் சாதனமாம்!
கல்வி நிகழ்ச்சி பார்த்திடுவோம்.
நல்ல கலை நிகழ்வும் பார்த்திடுவோம்.
கண்ணைக் கவரும் வண்ணப் படமும்.
காதினிக்க பாடல்களையும் கேட்டிடுவோம்.
நல்ல நிகழ்வுகளை நாளும் பார்த்திடுவோம்.
நற் பயனைப் பெற்றிடுவோம்.

**வீ.நிவேதன்,** ஆசிகுளம்.

# பொன் மொழியில் இரண்டு

| | |
|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | – இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது இரண்டு | – புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | – மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | – இளமை, முதுமை |
| நம்முடன் வருவது இரண்டு | – பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | – ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | – பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு | – பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது இரண்டு | – பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது இரண்டு | – பிறப்பு, இறப்பு |

**வ.அன்னலட்சுமி,** சந்திரவெளி.

## மனிதனுக்கு தேவையானவை



எறும்பின் **சுறுசுறுப்பு,**
எருதின் **உழைப்பு.**
நரியின் **தந்திரம்,**
நாயின் **விசுவாசம்.**
கழுதையின் **பொறுமை,**
காகத்தின் **கூட்டுறவு.**
புலியின் **வீரம்,**
புறாவின் **ஒழுக்கம்.**
யானையின் **அறிவு,**
மானின் **வாழ்வு.**

**ச.நவநீதன்,** ஆசிகுளம்.

# முயற்சி செய்!



அன்பு காட்ட முயற்சி செய்!
அரவணைக்க முயற்சி செய்!
ஆணவம் அழிக்க முயற்சி செய்!
கடவுளை வணங்க முயற்சி செய்!
கருணை காட்ட முயற்சி செய்!
கல்வியை கற்க முயற்சி செய்!
உண்மை பேச முயற்சி செய்!
உதவி செய்ய முயற்சி செய்!
ஊருடன் வாழ முயற்சி செய்!
நற் கருமங்கள் ஆற்ற முயற்சி செய்!
நன்றியுடன் நாளும் வாழ முயற்சி செய்!

**கீர்த்தனா,** தரணிகுளம்.



"நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகவே ஆகின்றாய்" என்று கூறியவர் - சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறக்கவிருக்கும் புத்தாண்டினை பயனுள்ளதாக மாற்றுங்கள்

- ஆடம்பர வாழ்க்கையை விட்டுவிட்டு எளிமையான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.
- சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் மலரச் செய்யுங்கள்.
- வாழ்க்கையில் சிறந்த ஒரு இலட்சியத்தை அமைத்துக் கொண்டு அதைப் பின்பற்றுங்கள்.
- உங்கள் சமயத்தை பின்பற்றுங்கள், பிற சமயத்தையும் அன்பு செய்யுங்கள்.
- நமக்கு தீமை செய்தவரையும், பகைவரையும் மன்னியுங்கள்.
- பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களை மதித்து கீழ்ப்படியுங்கள்.
- கல்வி கற்கும் மாணவர்களே! எக்காரணத்தைக் கொண்டும் உங்கள் கல்வியை இடை நிறுத்தி விடாதீர்கள்.
- துன்பத்தையும், தோல்வியையும் வாழ்க்கையின் அனுபவம் மிக்க வெற்றிப் படிகளாக மாற்றிக் கொள்ளுங்கள்.
- தீய எண்ணங்கள் யாவற்றையும் உதறித் தள்ளிவிடுங்கள்.
- மற்றவர்களைத் திருத்த முன்வராதீர்கள், முதலில் உங்களை நீங்களே திருத்திக் கொள்ளுங்கள், சமுதாயம் தானாகவே திருந்தும்.
- ஆண்களே! பெண்களை ஏமாற்றி அவர்களது வாழ்க்கையை வீணாக்கி விடாதீர்கள், பெண்களே! ஆண்கள் உங்களை ஏமாற்றும் அளவுக்கு நீங்கள் நாகரிகத்தை இழந்து விடாதீர்கள்.
- இறைவன் மீது நம்பிக்கை கொள்ளவும், இறை வார்த்தையின்படி வாழவும் கற்றுக் கொள்ளுங்கள்.

**ம. தர்மினி,** மணிபுரம்.

## நிரந்தர சமாதானம் வேண்டும்!

எம் நாட்டில் எங்கும் இரத்தக் கறைகள்!
இன வெறியை ஒழித்திட உள்ளன மறைகள்!
ஒற்றுமை நிலைநாட்ட உருவானது துறைகள்!
போர் வேண்டாமென முழங்கும் பறைகள்!
பிணங்கள் பெருகினால் இங்கில்லை கல்லறைகள்!
கொடுமைக்கென காத்திருக்கு சிறைகள்!
மானிடா! மானிடா! போதுமடா யுத்தம்,
வேண்டுமடா நிரந்தர சமாதானம்.

## தொலைதூர காட்சிகள் தந்திடுவாய் நீ..



தொலை தூரக் காட்சிகளை
துல்லியமாய்த் தந்திடுவாய்!
நிழல்களை நிஜமாய்
நம்பிடச் செய்தாய்!
புதுப் புது அறிவு சார் தகவல்களும்,
புதுமையாய்த் தருகின்றாய்!
உன் பயன் புரிந்தோர் சிலர்,
வீட்டுக்கு வீடு காவியம் படைக்கும்
தொலைக்காட்சியே!
தொலை தூரக் காட்சிகளை
தினம் நீ தந்திடுவாய் எமக்கு..

**ம. வினுஜன்,** இராஜேந்திரங்குளம்

## புகழ் பெற்ற நூல்களும், அதன் ஆசிரியர்களும்.

| | | |
|---|---|---|
| மகாபாரதம் | - | வேதவியாசர் (வடமொழி) வில்லிப்புத்தூர் (தமிழில்) |
| இராமாயணம் | - | வால்மீகி (வடமொழி) கம்பன் (தமிழ்) |
| நாலடியார் | - | சமன முனிவர். |
| திருக்காவலூர் கலம்பகம் | - | வீரமாமுனிவர். |
| பெரிய புராணம் | - | சேக்கிழார். |
| சீறாப்புராணம் | - | உமறுப்புலவர். |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோவடிகள். |
| மணிமேகலை | - | சீத்தலைச் சாத்தனார். |
| சீவக சிந்தாமணி | - | திருத்தக்க தேவர். |
| குண்டலகேசி | - | நாகுத்தத்தனார். |
| அரிச்சந்திர புராணம் | - | வீரகவிராயர். |
| பிரான்சிப் புரட்சி | - | தோமஸ் கார்லைன். |
| எனது போராட்டம் | - | அடல்ப் ஹிட்லர். |
| குறிஞ்சிப் பாட்டு | - | கபிலர். |

**த. பவானி,** சாம்பல்தீவு.

## சிந்தனைக்கு சில வரிகள்...

- ஒருவர் பேசியது நம்மைப் புண்படுத்துவதில்லை. நாம் எடுத்துக் கொள்ளும் விதம் தான் புண்படுத்துகின்றது.
- எல்லோரும் சொர்க்கத்துக்குப் போக விரும்புகின்றார்கள். ஆனால் யாரும் இறப்பதற்கு விரும்புவதில்லை.
- நீங்கள் எதிரிக்காக நெருப்பை எரித்தால் அது உங்களையே எரிக்கும்.
- நல்ல சங்கீதத்தை இரசியுங்கள், வாழ்க்கையின் சந்தோஷமான பக்கத்தைப் பாருங்கள்.

**த. பிருந்தாவன்,** கிடச்சூரி.



சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் விளக்கு, என்று கூறியவர் - அறிஞர் அண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கலை அமுது

மாணாக்கருக்கு உயிர் நண்பனாய்
விளங்கிடுதாம் தொலைக்காட்சி!
விண்வெளி முதல் சந்திரனின்
சுழற்சி வரை எடுத்துக் கூறி
விளக்கிடுதாம் மாணவர் கலை அமுது!
சின்னஞ்சிறு பாலகனும் இரசித்திடும்,
முதியோரும் விரும்பிடும்
கலை அமுது இத் தொலைக்காட்சி.
தொலைக்காட்சி எனப் பெயரிட்டதேன்?
என காரணமாய் நானும் கூறினேன்
தொலை தூர நிகழ்வுகளை எல்லாம்
காட்சியாய் கண் முன் காட்டிவிடுகிறது
எம் கலை அமுதுத் தொலைக்காட்சி!

**க.அஜந்தினி,** கணேசபுரம்.

## நல்லதைப் பெற்று நலம் சேர்ப்போம்!

தொலை தூரந்தனில் நடக்கும்
பலதையும் இல்லமதில் இருந்தபடி
பார்த்து மகிழ வைப்பது
தொலைக்காட்சி!
கலை நிகழ்வுகளையும் - நம்
கண் முன்னே காட்சிப்படுத்தி
கவலை மறைய கலகலப்பூட்டுவது
தொலைக்காட்சி!
பாலை உறிஞ்சி நீரை ஒதுக்கும்
அன்னப் பட்சியைப் போல - நாமும்
தொலைக்காட்சியில் நல்லவற்றைப் பெற்று
நம் கல்விக்கு நலம் சேர்ப்போம்!

**ரை.மேரிஅனஸ்ரீன்,** மூன்றாம்பிட்டி.

## எனது உறவுத் தொலைக்காட்சி

நாள் தோறும் நான் மகிழும்
எனதுறவு தொலைக்காட்சி
வண்ண காலங்களை வடிவாக
எடுத்துரைக்கும் என்னைக் கவரும் தொலைக்காட்சி
என் அன்புத் தாயுடன் நான் பார்க்கும்
என் நண்பன் தொலைக்காட்சி
சிறுவன் என் உள்ளத்துள்
எழுந்து நிற்கும் தொலைக்காட்சி
நாள் தோறும் நான் மகிழும்
நல்லுறவுத் தொலைக்காட்சி.



**ச.பிரதீஸ்,** கணேசபுரம்.

## விந்தை மிகுந்த தொலைக்காட்சி!




நாட்டில் உள்ள அனைத்தையுமே
ஒரு நொடியில் தெரிவிக்கும்
எமது நண்பன் தொலைக்காட்சி!
மூலை முடுக்கு, சந்து பொந்தில்
உள்ளதெல்லாம் தெளிவாய் விளக்கும்
தொலைக்காட்சி!
மாணவர் நிகழ்ச்சி தொடக்கம்
மக்களின் நிகழ்ச்சி வரை
மனமாரத் தரும் எம் இனிய
நண்பன் தொலைக்காட்சி!
நாடகங்கள் பலவும் தந்து
இல்லத்தரசிகள் மனதைக் கவர்ந்துவிட்ட
இனிய நல் தொலைக்காட்சி!
நகைச்சுவையை ஊட்டிவிடும்
நாகரிகக் கோமாளி தொலைக்காட்சி!
பல விடயங்களைப் பார்த்து அறியத்தரும்
விந்தை மிகுந்த தொலைக்காட்சி!

**ற.கம்சிகா,** கணேசபுரம்.

## நல்ல நண்பன் தொலைக்காட்சி

நான் விரும்பும் தொலைக்காட்சி!
நான் பார்த்து மகிழ்ந்திட பல நல்
நிகழ்ச்சிகள் தரும் தொலைக்காட்சி!
நல்லவர்கள் பலபேரை நாட்டிற்கு
அறிமுகம் செய்த தொலைக்காட்சி!
அறிஞர்கள் கவிஞர்கள் பலரை
உலகிற்கு காட்டியது இவ்வினிய தொலைக்காட்சி!
நமது நண்பன் தொலைக்காட்சி.

**இ.தனுசிகா,** கணேசபுரம்.

## தகவல் பெட்டகம்

மக்களை மகிழ வைப்பதும்,
பலரைத் தெளியச் செய்வதும்,
அறிவை வளர்த்து விடுவதும்,
அதிசய உலகம் அதில்
விசித்திர படைப்பாம்
தொலைக்காட்சி!
கருத்துக்களையும் கலைகளையும் கண்டு
திரைப்படங்களையும் நாடகங்களையும்
இரசித்துக் கொண்டு
நம்மை மறந்து லயித்துப்போகும்
தனிச்சிறப்பானதாம் தொலைக்காட்சி!
நாளும் நடக்கும் - பல
நாட்டு விடயங்களையும்
நடைமுறை மாற்றங்களையும்
நாமும் அறிந்து மாற்றம் பெறுவோம்,
நல்லதொரு ஏற்றம் காண்போம்.



**கு.டயாளினி,** மூன்றாம்பிட்டி.

## புதுமை படைக்கும் தொலைக்காட்சி

தொலைக்காட்சியாம் தொலைக்காட்சி!
எமக்கு நற்செய்தி சொல்லும் தொலைக்காட்சி!
பாலர் நாம் பார்த்து மகிழ்ந்திட நல்
சிறுவர் நிகழ்ச்சிகளைத் தரும் தொலைக்காட்சி!
வண்ணப் படங்களுடன் கூடிய நல்ல
கதைகள், நடனங்கள் தரும் தொலைக்காட்சி!
நீ என்றும் புதுமை படைக்கும் தொலைக்காட்சி!

**இ.கர்மிகா,** கணேசபுரம்.



இயேசு நாதர் உயிர் நீத்த போது அவரது வயது - 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களின் வெற்றி உறுதி!

(டாக்டர் G. இராமநாதன்)

இனி பணத்தை எப்படி செலவு செய்வது? என்பதைப் பார்ப்போம். நமது செலவுகளை மூன்றாகப் பிரிக்கலாம். முதலாவது, அத்தியாவசியமான செலவு. இது தவிர்க்கவே முடியாதது. வரி கட்டுதல், அன்றாட உணவிற்காக செலவிடுதல் போன்றன. இவைகளை செய்யாவிடில் பல பாதிப்புக்கள் உருவாகும். இரண்டாவது அவசியமான செலவு. சொந்த வீடு கட்டுதல், குழந்தைகளிற்கான படிப்புச் செலவு போன்றன. இவை அவசியமானதுதான் என்றாலும் தொகையின் அளவில் மாற்றிக் கொள்ள கூடியது. மூன்றாவது அவசியமில்லாத செலவு அன்பளிப்புக்கள், பிறருக்காக பணத்தை செலவிடுதல், மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதற்காக செலவு செய்தல் போன்றனவாகும். இவற்றை எம்மால் இயன்றளவு கட்டுப்படுத்துவது மேலானது.

மனிதர்களின் இயல்பு என்னவென்றால் எவ்வளவு பணத்தைச் சம்பாதித்தாலும் அத்தனையும் செலவு செய்தல், அதற்கு மேலும் செலவு செய்ய திட்டமிடுதலே ஆகும். இந்த இயல்பை முறியடிக்க வேண்டியதுதான் மிக மிக அவசியம். அதில் முக்கியமாக வரவுக்கு மீறி செலவிடுவதைத் தவிர்ப்பதே முக்கிய அம்சமாகும்.

கடன் வாங்குவதென்றால் பயம், கடன் வாங்கினால் தவறு என்று நினைக்கிறோம். ஆனால் அதில் நல்ல கடன் எது? தவறான கடன் எது? என்பதை அறிவதில்லை. கடன் வாங்குகின்ற பணத்தை, அந்த கடனின் வட்டிக்கு மேல் வருமானம் வருமாறு முதலீடு செய்து, தொழிலைப் பெருக்கினால் அது நல்ல கடனாகும். இது பணக்காரனின் செயற்பாடு. ஆனால் கடனை வாங்கி, எந்த வருமானத்தையும் அதிகமாக்காமல் செலவீனங்களில் போட்டு விட்டால், அதுவே சுமையான கடனாகிவிடும். இது தவறான கடன் ஏழையின் செயற்பாடாகும். கடனை வாங்கி வளர்ச்சிக்குத் திட்டமிட்டுச் செயல்படுத்துவது தான் செல்வந்தரின் முக்கிய சூத்திரம்.

பெரியவைகளாகத் தெரியும் எல்லா வெற்றிகளும், நம் கண்ணுக்குத் தெரியாமல் மிக ஆழமாக உள்ள அடித்தளத்தைக் கொண்டவை. "நான் பெரிய சாதனையாளராக ஆசைப்படுகின்றேன். அதற்காக காத்திருக்கின்றேன்" என்று எப்போது ஒருவன் சொல்கின்றானோ, அப்போதே காலம் கடந்துவிட்டது என்றார் ஒரு அறிஞர். மின்சாரத்தை கண்டுபிடித்து உலகையே வெளிச்சமாக்கிய எடிசன் தன் வெற்றியின் இரகசியத்தை சொல்கின்றார். 10 சதவீதம் அறிவும் 90 சதவீதம் உழைப்புமே என்னுடைய வெற்றியின் அடிப்படைக் காரணம்.

யார் திட்டமிட்டு கடுமையாக உழைக்கின்றார்களோ அவர்கள் எப்படியும் முன்னேறுவார்கள். வரலாற்றில் இதற்கு சிறந்த உதாரணம் ஜப்பான். இரண்டாம் உலகப்போரில் அழிந்த ஒரு நாடு, ஒரே தலை முறையில் முன்னேறியது என்றால், அதன் அடிப்படை உழைப்பு.

உழைக்கும் போது கிடைக்கும் சம்பளம் மட்டும் பெரிதல்ல, அத்துடன் விடாமுயற்சி, உடல் பலம், மனபலம், புதிய திறமை, உயர்ந்த குணம் போன்றனவும் எம்முள் இருக்க வேண்டும். கைகள், மூளை, இதயம் இம்மூன்றையும் இணைத்து உழைப்பவன் நிரந்தர சாதனையாளன்.

முற்றும்.

## பெரியோரின் கூற்றுக்கள்!

◆ எதிர்பார்ப்புகள் குறைவாக இருந்தால் ஏமாற்றமும் குறைவாக இருக்கும்.

**- ஏப்ரகாம் லிங்கன் -**

◆ எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகின்றதோ, அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

**- சுவாமி விவேகானந்தர் -**

◆ போர்க்களத்திலே பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன், ஆனால் காலம் வீணாக்கப்படுவதை, இழக்கப்படுவதை மட்டும் ஒரு போதும் நான் விரும்பமாட்டேன்.

**- நெப்போலியன் -**

◆ போவதைக் கண்டு கலங்காமல், வருவதைக் கண்டு மயங்காமல், பயந்து பயந்து நடுங்காமல், கோபத்தினாலே குதிக்காமல் இருக்கின்றானோ அந்த மனிதன் தான் உறுதியான அறிவு வாய்ந்தவன்.

**- பகவத்கீதை -**

**V.வீஜி, தம்பலகமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலீஸ் ரொம்ப ஈஸி - 22



**Dear friends,** இது பண்டிகைக் காலம். நாம் அனைவரும் shopping போவது வழக்கம். "விழாக்கால சிறப்புத்தள்ளுபடி" என்ற வார்த்தைகள் கடைகளின் வாசலில் தொங்குவதைப் பார்த்ததும் பலருக்கு shopping போகவேண்டும் போல இருக்கும் சரி வாங்க shopping போகலாம். ஒரு கடையில் நுழைந்தவுடன் அங்கே உள்ள ஒரு பொருளை வாங்க விரும்புகிறீர்கள். அப்பொருளை சுட்டிக்காட்டி அதன் விலை என்ன என்பதைக் கேட்க

**How much is that?**
(ஹௌ மச் இஸ் தட்?) என்று கேட்க வேண்டும். இதையே

**How much does it cost?**
(ஹௌ மச் டஸ் இட் கோஸ்ட்?) என்றும் கேட்கலாம். நீங்கள் நீல கலர் T-shirt வாங்க விரும்பினால்

**Have you got blue colour T-shirt?**
(ஹேவ் யு கொட் ப்ளூ கலர் டி.சர்ட்?) என்று கேளுங்கள். அதற்கு அந்த கடைக்காரர்

**Yes, we have, how many do you want?**
(யெஸ் வீ ஹாவ், ஹௌ மெனி டு யு வோன்ட்?) இருக்கிறது,

உங்களுக்கு எத்தனை வேண்டும்? என்று கேட்பார். உடனே உங்களுக்கு எத்தனை தேவை என்பதை கூறுங்கள்.

**I want two T-shirts** (ஐ வோன்ட் டூ டி-சர்ட்ஸ்) எனக்கு இரண்டு டி-சர்ட் வேண்டும் என்பது இதன் பொருள்.

ஒரு பொருளின் விலையைக் கேட்கின்றீர்கள். ஆனால் அவ்விலை உங்கள் பட்ஜட்டிற்குள் அடங்கவில்லை என்றால்

**Oh! It is too much** ( ஓ இட் இஸ் டூ மச்) என்று கூறுங்கள். இதைவிட மலிவானது உங்களிடம் இல்லையா? என்று கேட்க பின்வருமாறு கேட்கலாம்.

**Don't you have cheaper one?** (டோன்ட் யு ஹாவ் சீப்பர் வன்) எனலாம்.

கடைக்காரர் நீங்கள் கேட்ட பொருளை உங்களிடம் கொடுக்கின்றார். அந்தப் பொருள் சற்றுப் பழுதடைந்துள்ளது. வேறு நல்லதாக இருக்கிறதா என்று கேட்க விரும்பினால்,

**Have you better one?** (ஹாவ் யு பெட்டர் வன்?) என்று கேளுங்கள். சிலர் கடைகளுக்குச் சென்று பேரம் பேசாமல் ஒரு பொருளை வாங்க மாட்டேன் என்று வம்புக்கு நிற்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இதோ ஒரு டிப்ஸ்.

நீங்கள் அந்தப் பொருளை 100 ரூபாய்க்கு வாங்க விரும்புகிறீர்கள். ஆனால் கடைக்காரர் அதன் விலை 130 ரூபாய் எனக் கூறுகின்றார். அப்போது நீங்கள்

**Make it Rs.100** (மேக் இட் ஹன்ரட் ருப்பீஸ்) எனலாம்.

பரிசுப் பொருட்கள் விற்கும் கடைகளில் பொருட்கள் வாங்கச் செல்லும் போது

**I am looking for a gift article** ( ஐ ஆம் லுக்கிங் ∴பார் அ கி∴ப்ட் ஆர்டிகிள்) என்று கூறுங்கள்.
இதையே

**I want to buy a presentation article**
(ஐ வோன்ட் டு பை அ பிரசன்டேசன் ஆர்டிகிள்) என்று கேட்கலாம். நீங்கள் ஒரு பொருளை வாங்க விரும்பி அதன் விலை என்ன என்று விசாரிக்க

**I like this item. How much does it cost?** (ஐ லைக் திஸ் ஐட்டம். ஹௌ மச் டஸ் இட் கோஸ்ட்?) என்று கேட்கலாம்.

சரி பொருளை வாங்கி விட்டீர்கள். இதை அழகாக பொதி செய்து தாருங்கள் என்பதை

**Kindly get this gift wrapped** (கைன்ட்லி கெட் திஸ் கி∴ப்ட் ராப்ட்) என்று சொல்லுங்கள். சில வாழ்த்துக்களையும் அதன் அர்த்தங்களையும் கீழே காண்போம்.

1. **A Merry Christmas to you.**
(அ மெரி கிறிஸ்ட்மஸ் டு யு)
கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

2. **A Happy New Year**. (அ ஹப்பி நியூ இயர்)
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

3. **Many happy returnes of the day.**
(மெனி ஹப்பி ரிட்டன்ஸ் ஓ∴வ் த டே)
பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

4. **Best wishes for a long and happy married life.**
(பெஸ்ட் விஷஸ் ∴பார் அ லாங் அன்ட் ஹப்பி மறியட் லை∴வ்)
திருமண வாழ்த்துக்கள்.

5. **Heartiest Diwali Greetings**.
(ஹார்டியஸ்ட் தீவாளி கிரீட்டிங்ஸ்)
தீபாவளி வாழ்த்துக்கள்.

6. **Best wishes for a safe and plesamt Jurney.**
(பெஸ்ட் விஷஸ் ∴பார் அ சே∴வ் அன்ட் ப்ளசன்ட் ஜர்னி)
பயணம் இனிதாக அமைய வாழ்த்துக்கள்.

7. **Congratulations** (கங்ராஜிலேஷன்ஸ்)
இனிய வாழ்த்துக்கள்.

8. **Loving Greetings** (லவ்விங் கிரீட்டிங்ஸ்)
இனிய வாழ்த்துக்கள்.

9. **Best wishes for your success in the examination.**
(பெஸ்ட் விஷஸ் ∴பார் யுவர் சக்சஸ் இன் த எக்சாமினேஷன்)
தேர்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்.



புகைப்படத் தொழிலில் நெகட்டிவை நிலை நிறுத்தப் பயன்படுவது - ஹைப்போக் கரைசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலம் கற்கவும் பேசவும் எளிய வழி - 22

## Adjective : Degrees of Comparison
## பெயரடை: பெயரடைகளின் ஒப்பீடு

**There are three degrees of Comparison Positive, Comparative and Superative.**
பெயரடைகளின் ஒப்பீடு மூன்று வகைப்படும்.
இயற்படியான பெயரடை, உறழ்படியான (அதிகத்தை அறிவிக்கின்ற) பெயரடை, உச்ச உயர் நிலை பெயரடை.

1. **Positive** - இயற்படியான பெயரடை
The adjective is in its simple form without any change. Atleast one person or thing is needed.
இதில் எந்த மாற்றமும் இன்றி அதன் எளிய வடிவில் இருப்பது. இதற்கு ஒரு நபரோ அல்லது ஒரு பொருளோ தேவைப்படும்.
**eg.** Anusha is an Intelligent girl.
Suresh is a tall boy.
The Taj is a beautiful building.



2. **Comparative** - உறழ்படியான (அதிகத்தை அறிவிக்கின்ற) பெயரடை
The adjective donotes a highest degree of quality than the positive but lesser degree than the superative. Atleast two person or things are needed.
இயற்கைபடியான பெயரடையைவிட உயர்ந்த பெயரடை ஒப்பீட்டைக் குறிக்கின்றது. ஆனால் உச்ச உயர்நிலையை விட சற்று குறைவே, இதற்கு இரண்டு நபரோ அல்லது பொருள் தேவைப்படும்.
**eg.** Nishanthi is more intelligent than Anusha
Ramesh is taller than Suresh
Redfort is more beautiful than Taj.



3. **Superative** - உச்ச உயர்நிலை பெயரடை
The adjective denotes the highest degree of the quality. Atleast three person or things are needed.
பெயரடை உச்ச ஒப்பீட்டுத் தரத்தைக் குறிக்கின்றது. குறைந்தது மூன்று பொருட்கள் தேவைப்படும்.
**eg.** Jency is the most intelligent girl in the class.
Ajay is the tallest of the three
Nisham palace is the most beautiful building in India.

## Way of Forming the Comparative and superative.

உறழ்படி பெயரடை மற்றும் உச்ச உயர்நிலை பெயரடையை அமைக்கும் வழிகள்.

a. Comparative by adding "er", Superative by adding "est"
இயற்படியான பெயரடையின் இறுதியில் **"er"** சேர்த்தால் அது உறழ்படி பெயரடை இயற்படியான பெயரடையின் இறுதியில் **"est"** சேர்த்தால் அது உச்ச உயர்நிலை பெயரடை.

| Positive | Comparative | Superative |
|---|---|---|
| Bold | Bolder | Boldest |
| Clear | Clearer | Clearest |
| Great | Greater | Greatest |
| Small | Smaller | Smallest. |

**Words ending in Y by adding "ier" and "iest"**

| | | |
|---|---|---|
| Lazy | Lazier | Laziest |
| Happy | Happier | Happiest |
| Merry | Merrier | Merriest |
| Ugly | Uglier | Ugliest |

**By adding "r" and "st"**

| | | |
|---|---|---|
| Able | Abler | Ablest |
| Brave | Braver | Bravest |
| Fine | Finer | Finest |
| Noble | Nobler | Noblest |

Degree of comparision - ஐப் புரிந்து கொண்டு கொடுக்கப்பட்ட உதாரணங்கள் மூலம் புதிய வாக்கியங்களை எழுதி அவற்றை மாற்றிப் பார்க்கவும். அதையே நண்பர்களுடன் பேசிப் பார்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Proverbs - பழமொழிகள்

- An old man is twice his child.
  பல்லில்லாத கிழவனும், பச்சிளம் குழந்தைதான்.
- Age is a symbol of maturity.
  முதுமை பக்குவத்தின் அடையாளம்.
- Anger punished it self.
  தன்னையே கொல்லும் சினம்.
- Strong and bitter words indicate a weak cause.
  காரணம் சிறிதானால் சொற் தோரணம் பெரிதாகும்.
- To hold a candle to a devil.
  வேதாளத்திற்கு விளக்குப் பிடித்தது போல.
- Youth is full of pleasure Age is full of care.
  வாலிபம் இன்பத்தால் நிறையும், வயோதிபம் கவலையால் நிரம்பும்.
- Times change and we with them.
  காலம் மாறிப் போனால் ஆளும் மாறிப் போவான்.
- The first breath is the beginning of there.
  முதல் மூச்சே மரணத்தின் தொடக்கம்.
- Think of the devil and he is there.
  பேயை நினைத்த மாத்திரத்தில் வரும்.
- Diligence is the mother of good fortune.
  உழைப்பே அதிஷ்டத்தின் தாய்.
- Trust not a new friend nor an old enemy.
  புதிய நண்பனையும் பழைய பகைவனையும் நம்பாதே.
- A fool's sermon gives no solution.
  முட்டாள்களின் உபதேசம் தீர்வு தராது.
- Hope is poor man's bread.
  ஏழையின் கஞ்சி நம்பிக்கையில் இருக்கின்றது.
- An idle mind is devil's workshop.
  சோம்பேறி மனம் பேயின் பட்டறை.
- Doubt is the key of knowledge.
  ஐயமே அறிவின் திறவு கோல்.

## சிந்தனைத் துளிகள் சில

- நட்சத்திரத்தை நோக்கி நமது பயணம் அமையட்டும்.
- சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உருவாக்கப்படுபவன் அல்ல மனிதன், அவன் தான் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குபவன்.
- ஒருவரிடம், அவரைப் பற்றிப் பேசுங்கள், மணிக்கணக்காக கேட்டுக் கொண்டிருப்பார்.
- சந்திரனைக் குறி வைப்போம். குறி தவறினால் கூட நட்சத்திரங்களை எட்டலாம்.
- நீண்ட கொம்புகளை கொண்ட காளை முட்டா விட்டாலும், முட்டிய பழிக்கு ஆளாகும்.
- உங்கள் விரோதிகளே உங்களை புத்திசாலியாக மாற்றுகின்றார்கள்.
- வெளித் தோற்றத்தை வைத்துப் பிறரை எடை போடுவதில் வாழ்நாள் முழுவதும் எச்சரிக்கை தேவை.
- வாய்ப்பு தேடி வந்து கதவைத் தட்டும் போது, சத்தமாக இருக்கிறதே என குறைபட்டுக் கொள்பவனே அவநம்பிக்கை வாதி.
- எந்தச் சட்டமும் இல்லாவிட்டாலும் கூட, மனசாட்சி அமலிலிருக்கும்.
- உங்களின் விரோதியின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்களுடைய பிழைகளை கண்டு பிடிப்பவர்கள் அவர்கள் தான்.
- கடவுளின் கருணைக்காக கை கூப்பும் நாம், யாரிடமும் கருணை காட்டுவதில்லை.
- அட்டகாசமான சிரிப்பு ஞான சூன்யத்தின் பிரதிபலிப்பு.
- தோற்றத்தைப் பற்றி கவலைப்படும் பலர் தத்தம் மூளையைப் பற்றிக் கவலை கொள்வதில்லை.
- ஒரு முழுப் பொய்யை நேரடியாக எதிர்கொண்டு மோத முடியும். பாதிப் பொய்யும், பாதி உண்மையும் கலந்திருக்கும் ஒன்றுடன் மோதுவது கடினம்.
- கேள்வி கேட்பவன் ஒரு நிமிடத்திற்கு முட்டாளாக இருக்கிறான். கேள்வி கேட்காதவன் வாழ்நாள் முழுவதும் முட்டாளாக இருக்கிறான்.
- வாழ்க்கைப் போராட்டத்தில் கற்பதே, இந்த உலகத்தின் தலை சிறந்த கல்வி.
- இணைவது ஓர் ஆரம்பம், இணைந்தே இருப்பது முன்னேற்றம், இணைந்து செயற்படுவது வெற்றி.
- ஒருவரை எப்படிப் படிப்பது என்பது மட்டும் தெரிந்திருந்தால், ஒவ்வொருவரும் புரட்டப் புரட்ட சலிக்காத புத்தகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு போட்டா போட்டி – 22

1. உலகின் ஒரே இந்து நாடு எது?
2. ஜெர்மனி நாட்டின் தலை நகரம் எது?
3. போலந்து நாட்டு நாணயத்தின் பெயர் என்ன?
4. "ஜெயவர்த்தனபுரம்"தற்போது நம் நாட்டில் எந்தப் பெயரில் அழைக்கப்படுகின்றது?
5. ஐரோப்பாவின் நோயாளி என்று அழைக்கப்படும் நாடு எது?
6. மனிதன் முதன் முதலில் கண்டுபிடித்த உலோகம் எது?
7. மனித உடலில் எத்தனை சதவீதம் நீர் உள்ளது?
8. "சத்திய சோதனை" எனும் நூலின் ஆசிரியர் யார்?
9. "சகுனி" என்ற பாத்திரம் எந்தக் காவியத்தில் வருகின்றது?
10. மகாத்மா காந்தியின் மகன் பெயர் என்ன?

## பொது அறிவு போட்டா போட்டி – 21 விடைகள்

| | |
|---|---|
| 1. தொடை எலும்பு. | 6. ஆபிரிக்கா. |
| 2. 02, ஒக்டோபர். | 7. ஈமோகுளோபின். |
| 3. வெதும்பை. | 8. இராமலிங்க அடிகளார். |
| 4. மணிமேகலை. | 9. B-36 |
| 5. ஆறு. | 10. A-மீன் |

9 மதிப்பெண்கள் பெற்று பரிசு பெறுபவர்கள்

**பி.சந்தானலெட்சுமி** - சாம்பல் தீவு

**த.ரேவதி** - சாம்பல் தீவு

**ப.தனு** - சாம்பல் தீவு

## குறை கூறும் முறை

பிறரைப் பற்றிக் குறை கூறாமல் இந்த சமுதாயத்தில் வாழ முடியாது. ஆனால் மற்றவர்களுடைய குறையை எடுத்துச் சொல்லும் போது அவர்களின் மனம் நோகாதபடி இருக்க இந்த கட்டளைகளைப் பின்பற்றலாம்.

1. ஒருவருடைய குறையைச் சுட்டிக் காட்டும் போது அவரை மற்றவர்களோடு ஒப்பிட்டு, தாழ்த்திப் பேசாதீர்கள்.
2. ஒருவருடைய குறையை ஆறப் போட்டுச் சுட்டிக் காட்டுவதை விட உடனுக்குடன் சுட்டிக் காட்டினால் அதிக பயன் விளையும்.
3. குறையைச் சொல்லும் போது முகத்தில் கோபமோ, வெறுப்போ வெளிப்படாமல் இயல்பாக இருக்க முயலுங்கள்.
4. ஒரு தடவை ஒரு குறையை மட்டும் கூறினால் போதுமானது.
5. மூன்றாம் மனிதர் முன் குறை கூறுவதை அடியோடு தவிர்க்க வேண்டும்.

## உலக அதிசயத்தை அறிந்து கொள்வோம்

- **பிரமிட்டுக்கள்** - எகிப்து
- **தாஜ்மஹால்** - இந்தியா
- **மாபெரும் சுவர்** - சீனா
- **சுதந்திர சிலை** - அமெரிக்கா
- **நயாகரா நீர்வீழ்ச்சி** - வட அமரிக்கா
- **சாய்ந்த கோபுரம் (பைசாக் கோபுரம்)** பிரான்ஸ்
- **தொங்கு தோட்டம்** - பபிலோனியா

**இ.மனோஜ்,** சொறிக்கல்முனை.

## விடுகதையும் விடையும்

01. வாய் இல்லை வார்த்தைகள் சொல்வான், உயிர் இல்லை ஊருக்குப் பறப்பான், வீட்டுக்குத் தேடி வருவான், அவன் யார்?
02. பழகினால் மறக்காதவன், பயந்தோரை விடாதவன், அவன் யார்?
03. நோயுமில்லை நொடியுமில்லை, ஆனால் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே போவான், அவன் யார்?
04. வானத்தில் பறக்கும் வாலுள்ள மனிதனுக்கு, பூமியில் இருந்து கால், அவன் யார்?
05. கேட்டால் பேசமாட்டான், இரண்டு போட்டால் பேசுவான், அவன் யார்?

**யூ.டயஸ்,** சொறிக்கல்முனை.

06. சுற்றுவது தெரியாது, ஆனால் சுற்றிக் கொண்டே இருப்பான், அவன் யார்?
07. வெள்ளை மாளிகைக்குள், மஞ்சள் புதையல், அது என்ன?
08. மழைக் காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டும் பாடுவாள், அது என்ன?
09. காட்டில் பச்சை, கடையில் கறுப்பு, வீட்டில் சிகப்பு, அது என்ன?
10. கண்ணுக்குத் தெரியாதவன், உயிருக்கு உகந்தவன், அவன் யார்?

**இ.விஜயலதா,** பாலையத்தோணா.

| | |
|---|---|
| 01. கடிதம் | 06. பூமி |
| 02. நாய் | 07. முட்டை |
| 03. நாட்காட்டி | 08. தவளை |
| 04. பட்டம் | 09. தேயிலை |
| 05. மத்தாளம் | 10. காற்று |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்குன்குன்யா பற்றி தெரிந்து கொள்ள வேண்டியவை

சிக்குன்குன்யா வைரஸ் காய்ச்சல் ஒரு உயிர்க் கொல்லியல்ல என்பது ஆராய்ச்சிகளின் முடிவு.

## சிக்குன்குன்யாவின் அறிகுறி

இந்த வைரஸ்ஸால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 102.2 பரனைட் வரை (39பாகை செல்சியஸ்) காய்ச்சல் இருக்கும். இந்த வைரஸ் மூட்டுப்பகுதிகளையே தாக்குவதால் ( Joints) கை, கால், விரல் மற்றும் உடலில் ஏனைய எலும்பு இணைப்புப் பகுதிகளில் கடுமையான வேதனை ஏற்படும். மேலும் தலைவலி, தூக்கமின்மை என்பவற்றோடு பசியின்மையும் ஏற்படும். ஒரு சிலருக்கு வாந்தி, மயக்கம் ஏற்படலாம்.

கூடுதலாக மூட்டுவாத நோய்களில் பாதிக்கப் பட்டிருப்போருக்கு சிக்குன்குன்யா வந்தால் அவர்களின் நிலை படு மோசமாக இருக்கும். இந்தக் காய்ச்சல் 5-7 நாட்கள் வரை இருக்கும். காய்ச்சல் குறைந்தாலும் மூட்டுப்பகுதியில் உள்ள வேதனை குறையாது. இதனால் ஒரு சிலர் நடமாடுவதற்கு முடியாத நிலை ஏற்படும்.

## சிகிச்சை முறைகள்

இக் காய்ச்சலுக்கு குறிப்பிடும்படியான எவ்வித மருந்துகளும் இதுவரை கண்டுபிடிக்கப்பட இல்லை. எனினும் வைத்தியர்கள் பரசிட்டமோல் ரக மாத்திரைகளை இதற்கு சிபாரிசு செய்கின்றனர். மேலும் இக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களை ஓய்வெடுக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். அதாவது இக்காய்ச்சல் உள்ள காலத்தில் கை, கால்களை அசைத்து வேலை செய்வது கூடாது. கொதித்து ஆறிய நீரை தாராளமாக அருந்த வேண்டும். உணவு முறைகளில் கட்டுப்பாடு இல்லையென்றாலும், நீர் ஆகாரம் சிறந்தது.

## தவிர்க்க வேண்டிய விடயங்கள்

காய்ச்சல் ஏற்பட்டவுடன் வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்தகங்களுக்குச் சென்று இஷ்டப்படி மாத்திரைகளை வாங்கி உட்கொள்ளாதீர்கள். மிக முக்கியமான விடயம் என்னவெனில் சிக்குன்குன்யா காய்ச்சலுக்கு அஸ்பிரின் ரக மாத்திரைகள் தவிர்க்கப்பட வேண்டும். சிக்குன்குன்யாவால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அஸ்பிரின் ரக மாத்திரைகளை உட்கொண்டால் பல பக்க விளைவுகள் ஏற்படலாம். அதில் முக்கியமான ஒன்று உடம்பில் பல அரிப்புகள், புள்ளிகள், கொப்புளங்கள் என்பன ஏற்படும் என்பதாகும்.

## முன்கூட்டியே தவிர்க்க முடியுமா?

ஆம் இதை முன்கூட்டியே தவிர்த்துக்கொள்ள முடியும். இந்த வைரஸ் இலங்கையில் பரவ ஆரம்பித்தவுடன் பலர் நுளம்புகள் பரவாது தமது சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குப்பை கூழங்களை அகற்ற வேண்டும் என்றே பிரச்சாரம் மேற்கொண்டனர்.

ஆனால், நுளம்பு கடித்த ஒருவருக்கு மட்டுமே இக்காய்ச்சல் ஏற்படும் என்பதற்கு அப்பாற்பட்டு, ஒரு வீட்டிலுள்ள மற்றவருக்கும் பரவும் என தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் முன்கூட்டியே இதை தவிர்ப்பதற்கு சில ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் முக்கியமான விடயம் அதிகம் நீர் அருந்துவதுதான்.

கொதித்து ஆறிய நீரை ஒரு நாளைக்கு 5-6 லீற்றர் வரை அருந்தி வந்தால் இந்த வைரஸ் தொற்றிலிருந்து தப்பிக்கொள்ளலாம். அப்படி நீர் அருந்தி வரும் போது அதையும் மீறி நீங்கள் இத்தொற்றுக்கு ஆளாகினாலும் அதன் கடுமை குறைவாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. ஒரு சுகதேகியான மனிதன் ஒரு நாளைக்கு குறைந்தது 8 டம்ளர் நீர் அருந்த வேண்டுமென்பது வைத்தியர்களின் அறிவுரை. ஆனால், இதை எத்தனை பேர் பின்பற்றுகின்றார்கள் என்பது தெரியவில்லை.

இக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு காய்ச்சல் குறைந்தாலும் கை, கால் இணைப்புகளில் வேதனை இருக்கும். இதை போக்குவதற்கு பாதிக்கப்பட்டோர் கடையில் விற்கப்படும் கசாய பெக்கட்டை வாங்கி ஒரு நாளைக்கு 3-4 டம்ளர்கள் வீதம் குடிக்கலாம்.

மேலும் அதிகமாக நடப்பதையும் பளுவான பொருட்களை தூக்குவதையும் தவிர்க்க வேண்டும்.

## இரத்த அழுத்தம், வாதநோய்கள், நீரிழிவு உள்ளவர்கள் கவனிக்க வேண்டியது

இவ்வைரஸ் ஆனது ஒருவரின் இரத்த அழுத்தம், சர்க்கரையின் அளவு என்பவற்றைக் கூட்டும், குறைக்கும் திறன் படைத்தது.

இதனால் இவர்கள் உடனடியாக மருத்துவரை அணுகி இரண்டு நாளைக்கு ஒரு முறையாவது தங்களை பரிசோதிப்பது நல்லது.

மொத்தத்தில் சிக்குன்குன்யா என்பது ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு நோய் இல்லை, என்றாலும் பல்வேறு நோய்களை உடம்பில் கொண்டிருப்போருக்கு இது ஆபத்தாகலாம் என்கின்றன ஆராய்ச்சிகள்.



ஆசியாவில் தொலைக் காட்சியை முதலில் அறிமுகப்படுத்திய நாடு - தாய்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர நிர்வாகமும் சுய முன்னேற்றமும் – (J.S ஏப்ரகாம்)

பாகம் -1



**வழக்கத்துக்கு முன்பாக...**

காலை 6 மணிக்கே ஆபீசுக்கு சென்றுவிடுகின்ற ஆசாமியை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? அலுவலக நேரம் 10 மணி என்றால் ஒரு அரை மணி நேரம் தாமதமாகி செல்வதையே வழக்கமாக்கிக் கொண்டவர்கள் நம்மவர்கள். இங்குள்ள உயர் அதிகாரிகள் இதனைத்தான் பெருமையாகக் கருதுகின்றார்கள்.

'மீடியா கிங்' என்று அமெரிக்கா போற்றும் எஸ்.ஐ.நியூஹவுஸ் என்பவர் சரியாக 6 மணிக்கெல்லாம் தம்முடைய ஆபீசில் ஆஜராகி விடுகின்றார். தம்முடைய மற்ற எடிட்டர்கள் வருவதற்கு முன்னதாக அன்றைய முக்கிய வேலைகள் என்னென்ன என்று ஆராய்கிறார். விளம்பரம், விநியோகம் மூலம் வந்து குவியும் டாலர் எண்ணிக்கைகளை பரிசோதிக்கின்றார். தினமும் 16 மணி நேரம் வேலை பார்க்கிறவர் அமெரிக்காவிலேயே அதிக சொத்துக்காரராக இருப்பதில் ஆச்சரியம் என்ன?

'உங்களுடைய நாளை நீடித்துக் கொள்ள விரும்பினால் இரவிடம் இருந்து சில மணி நேரங்களை அபகரித்துவிடுங்கள். நியூயார்க் பக்கமாய் உள்ள ஒரு 'க்ளப்' பில் இப்படியான 'Motto' வைத்திருக்கிறார்கள். நல்ல யோசனை இதனைப் பலவிதமாய் பின்பற்ற முடியும்.

**காலைச் சிற்றுண்டி**

ஆரோக்கியமான உணவு நேரத்தை மிச்சப்படுத்தும், முற்பகல் முழுவதிலும் உற்சாகத்துடன் காரியம் பண்ணத் தேவையான சக்தியைக் கொடுக்கும். குறைவான நேரத்தில் அதிக வேலைகளைச் செய்து முடிப்பீர்கள்.

T.V.யில் செய்தி பார்த்துக் கொண்டே சாப்பிடலாம். தனியாக செய்தித்தாளுக்கு நேரம் செலவழிக்க வேண்டியதில்லை. இப்போது எவ்வித டென்ஷனும் இல்லாமல் உங்களுடைய காலை நேரம் தொடங்கிவிட்டது. குறித்த நேரத்துக்குள் அலுவலகம் சென்றடையலாம். நிகழ்ச்சி நிரலின் படி வேலையை ஆரம்பிக்கலாம்.

**ஆர்வம் தேவை**

வேலை அறிந்து செய்கிறவர்களுக்கு விரல் மடக்க நேரம் கிடையாது என்பார்கள். இல்லத்தரசிகளைப் பாருங்கள் ஒருவருக்கு நேரம் போகவில்லை இன்னொருவருக்கு நேரம் போதவில்லை.

"எனது நாட்டில் ஒருவன் வேலை செய்யாது கைகளைக் கட்டிக் கொண்டிருந்தால், ஒரு பெண்மணி சோம்பிக் கிடந்தால் என் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த இன்னொருவரைப் பட்டினி போடுகின்றார் என்று தான் அர்த்தம்" இப்படிச் சொன்னது ஒரு சீனச் சக்கரவர்த்தி. அது நமக்கும் பொருந்தும்.

கரோலின் பெர்க்ஸ் என்ற பெண்மணி சொல்வார் "ஆர்வம் குன்றிய நிலைக்குத் தள்ளப்படாதீர்கள்'' என்று.

நேர நிர்வாகத்தில் இது முக்கியம்.. ஆர்வம்! ஆணோ, பெண்ணோ நாம் தகுதி உடையவர்களாய், நேர்த்தியாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்குவது அவசியம். நீங்கள் உடல் பராமரிப்புக்கு முதல் இடம் கொடுங்கள். நேரம் தன்னால் கிடைத்துவிடும்.

உங்களுக்கு சிறகுகள் இருப்பதை ஏன் மறந்து போனீர்கள்?

புளுக்களாக உணர்கின்றீர்கள். உங்களை நீங்களே முடமாக்கிக் கொள்ள வேண்டாம். சிறகை விரியுங்கள், வானம் அதோ பரந்து கிடக்கின்றது.

**முழுமை வேண்டும்**

நீங்கள் எந்தக் காரியத்தில் இறங்கினாலும் ஒரு தீவிரமும், ஈடுபாடும் தேவை. அப்பொழுது தான் அதை முழுமையாகச் செய்ய முடியும்.

மலை ஏறுகின்றவர்கள் சிகரத்தைத் தொட்டால் தான் சாதனை முழுமை பெறுகின்றது, அங்கீகரிக்கப்படுகின்றது. எந்த இடத்திலும் அன்றைய வேலையை அன்றைக்கே முடிப்பதுதான் முழுமையான பணி.

"செய்வன திருந்தச் செய்'' என்பார்கள். காரியத்தை செவ்வனே முடிக்கத் தெரியாதவர் நேரத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியவில்லை என்று தான் அர்த்தம்.

நூறு வருஷம் என்பது வாழ்க்கையின் முழுமையல்ல எப்படி வாழ்கின்றோம் என்பதே முக்கியம்.

**உகந்த நேரம்**

சிலருக்குப் பொழுது விடிகின்ற நேரத்தில்தான் அசத்தியாக தூக்கம் வரும். சோர்வு அல்லது சோம்பலின் முழு பிரயோகமும் அவர்கள் மீது இருக்கும். படுக்கையை விட்டு எழுவதே பகீரதப் பிரயத்தனமாகப்படும்.

காலை 9 மணிக்கு நீங்கள் எப்படி இருக்கின்றீர்களோ மாலை 3 மணிக்கு அப்படி இருப்பதில்லை. உங்கள் உணர்வுகள், வேலைத்திறன், எச்சரிக்கை போன்றன நாள் முழுவதும் வெவ்வேறு அளவில் அமைவதாகக் கண்டறிகின்றீர்கள்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான விளையாட்டு - 3

## ஜீரணத்திற்கு எளிது



**என்ன தேவை?**

2 இருமல் மாத்திரைகள்
2 சிறிய கண்ணாடிக் குப்பிகள்
தண்ணீர்

**எப்படிச் செய்வது?**

1. இரண்டு மாத்திரைகளையும் தனித்தனியே குப்பிகளில் வைத்து பாதியளவு தண்ணீர் ஊற்றி மூடவும்.
2. ஒரு குப்பியை மேலும் கீழும் அசைத்து லேசாகக் குலுக்கவும். மற்றதை அப்படியே வைக்கவும்.
3. சில நிமிடங்களின் பின்னர், இரண்டு குப்பிகளில் உள்ள நீரின் நிறத்தைக் கவனிக்கவும். நீங்கள் குலுக்கிய குப்பியின் தண்ணீரின் நிறம் மற்றதை விடவும் அடர்த்தியாக இருக்கும்.

**ஏன் அப்படி?**

குப்பி குலுக்கப்படும் போது ஏற்படும் தண்ணீரின் அசைவு மாத்திரையைக் கரைக்க உதவுகின்றது. நீங்கள் உணவு உண்ணும் போது உங்கள் வயிறும் இதையேதான் செய்கிறது. அது சும்மா இருப்பதில்லை. அதன் தசைகள் சுருங்கி விரிந்து உணவைப் பிசைந்து சிறிய துண்டுகளாக்கி கூழ்போல் ஆக்குகின்றன.

# தெரிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| இலங்கை | - | இரத்தின பூமி |
| நோர்வே | - | நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு |
| ஜப்பான் | - | அதிகாலையில் சூரியன் உதிக்கும் நாடு |
| எகிப்து | - | நைல் நதியின் கொடை |
| பின்லாந்து | - | ஆயிரம் ஏரிகள் நாடு |
| திபெத் | - | உலகத்தில் தடுக்கப்பட்ட நாடு |
| சுவிற்சர்லாந்து | - | ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் |
| பெல்ஜியம் | - | ஐரோப்பாவின் கர்ப்பகம் |
| துருக்கி | - | ஐரோப்பாவின் நோயாளி |
| பாலஸ்தீனம் | - | புனித நாடு |
| கியூபா | - | சர்க்கரைக் கிண்ணம் |
| அவுஸ்திரேலியா | - | தங்கப் போர்வை நாடு |
| அயர்லாந்து | - | மரகதத் தீவு |
| பர்மா | - | பொற்கோபுர நாடு |
| இங்கிலாந்து | - | சூரியன் மறையும் நாடு |
| ஆபிரிக்கா | - | இருண்ட கண்டம் |
| உரோமாபுரி | - | அழியா நகரம் |
| கொரியா | - | அதிகாலை அமைதி நாடு |



**இ.மனோஜ்,** சொறிக்கல்முனை.



பறவைகளைப் பற்றிப் படிக்கும் படிப்பு - ஆர்னிதாலஜி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அண்ணல் அருப்பே

**Fr.ஜெரி**

1933-1936 வரை ஹாலந்து நாட்டில் இறையியல் படித்தார். எதிர்காலத்தில் ஜப்பானில் பணி செய்ய உதவியாக ஆங்கிலம், ஜெர்மனிய மொழிகளைக் கற்றார். ஏனெனில், ஜப்பானில் அப்போது ஜெர்மனியக் குருக்கள் பணியாற்றினார்கள்.

12 மொழிகளைப் புரிந்துகொள்ளும் புலமையும், அவைகளில் இலத்தீன், ஸ்பானிஷ், ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ஆங்கிலம், ஜப்பானிஷ் ஆகிய 7 மொழிகளில் சிறப்புத் தேர்ச்சியும் பெற்றார். ஐரோப்பிய நாடுகளில் பயிற்சி பெற்ற சமயத்தில் ஜப்பானிய நண்பர்களுடன் நெருக்கம் வைத்துக்கொண்டார்.

இத்தனையும் ஜப்பானுக்குப் போவதற்கு அனுமதி கிடைப்பதற்கு முன்னதாகவே! 1936ம் ஆண்டு தொடக்கத்திலே வித்தியாசமான அனுபவம் ஒன்றும் கிடைத்தது.

மருத்துவக் கல்வியைப் பாதியிலே நிறுத்தி ஏறக்குறைய 10 ஆண்டுகளாகி இருந்தாலும், அனைத்துலக ஆராய்ச்சிக் கூட்டமொன்றில் பங்கு எடுக்க வருமாறு அழைப்பு ஒன்று பேதுரு அருப்பேவைத் தேடி வந்தது. அதுமட்டுமல்ல பெரிய மருத்துவ நிபுணர்கள் முன்பாக, ஆராய்ச்சிக் கட்டுரைகள் இரண்டு வாசிக்கவும் வாய்ப்பு வந்திருந்தது.

***அழைப்பு!***

குருத்துவப் பயிற்சியாளர்கள் தந்த ஊக்கத்தினால், அனைத்துலக மருத்துவ ஆராய்ச்சிக் கூட்டத்திற்குச் சென்றார். அது ஆஸ்திரியா தேசத்தில் வியன்னா எனும் நகரில் நடைபெற்றது. இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வாசித்தார். நிபுணர்களும், மேதைகளும், வல்லுநர்களும் கூட அசந்து போனார்கள், பேதுரு அருப்பேவின் ஆய்வு முடிவுகளை அறிந்து...!

“அட்டகாசமான அந்தப் பாராட்டுக்களைப் பெற்ற போது, என்னை எங்கு நிறுத்திப் பார்ப்பது என்று அறியாது தவித்தேன். எனினும், தடம் புரளவில்லை. ஏனெனில் அந்த வெற்றிக் கணங்கள் முழுமையாக என்னுடையதல்ல என்பதனை அறிந்திருந்தேன்...” என்று அந்த மறக்கமுடியாத நிகழ்ச்சியைப் பற்றிப் பின்னர் குறிப்பிட்டுப் பேசுவார், பேதுரு அருப்பே.

‘‘ஆஸ்திரியா’’விலிருந்து, மேற்பயிற்சித் தளமிருந்த “ஹாலந்து” தேசத்திற்கு திரும்பினார். அதே ஆண்டு 1936, ஜூலைத் திங்கள் 30ம் திகதி, தமது 9 ஆண்டுப் பயிற்சிகளின் சிகரமாக, குருவானார்.

இந்தக் குருத்துவத் திருநிலைப்படுத்தும் நிகழ்வு “பெல்ஜியம்” நாட்டில் நடைபெற்றது. அவருடன் 40 இயேசு சபையினர் குருவானார்கள். குருத்துவத் திருநிலைப்படுத்தும் வைபவத்திற்கு தலைமை வகித்து நடத்தியவர், பெல்ஜியத்திலுள்ள லீஜ் நகரத்துப் பேராயர் லூட்விக் ஜோஸ்.1936, செப்டம்பர் 15ம் திகதி பெல்ஜியத்திலிருந்து கப்பல் மூலமாக “அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் செல்கின்றார் பேதுரு அருப்பே. அங்கு 1938 வரை மேல் படிப்பு மேற்கொள்கின்றார்.

***அதே சமயத்தில்***

அங்கு அருகே உள்ள சாதாரண மக்களுக்குச் சேவைகளும் புரிகின்றார். இடைப்பட்ட 1937ம் ஆண்டின் போது, கோடை விடுமுறை காலத்தை ‘‘மெக்சிக்கோ’’ நாட்டிலுள்ள மக்களுடன் பயன்படுத்துகின்றார். ஸ்பெயின், பெல்ஜியம், ஹாலந்து, ஆஸ்திரியா, அமெரிக்கா, மெக்சிக்கோ... என பல்வேறு நாடுகளில் பயிற்சி பெற்றதன் காரணமாக வெகுவாக பரந்த அனுபவமும், ஆழமான புலமையும், திண்மமான எண்ணமும், தீர்க்கமான அணுகுமுறையும் பேதுரு அருப்பேவின் அரிய அம்சங்களாக அமைய ஆரம்பித்தன. மேல் படிப்பு முடிவடையும் தருவாயில் இருக்கின்றது.

உரோமையில் இருக்கும் பொதுத் தலைவருக்கு மீண்டும் கடிதம் எழுதி ஜப்பான் செல்வதற்கான அனுமதியை நாடுகின்றார் பேதுரு அருப்பே. 8 ஆண்டுகளுக்கு முன் இருந்த அதே பொதுத் தலைவர்தான் இன்னமும் இருக்கின்றார். அவரிடமிருந்து என்ன பதில் வருமோ என்று கலக்கத்துடன் எதிர்பார்த்த வண்ணமாக இருக்கின்றார் பேதுரு அருப்பே.

***அதே சமயத்தில்***

அவரது மனதில் நம்பிக்கையும் இருக்கின்றது, ஏனெனில், சென்ற முறை இலொயோலா நகரத்து பயிற்சி இல்லத் தலைவர் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகள் இன்னமும் பேதுரு அருப்பேவின் காதுகளில் ஒலித்த வண்ணமாகவே இருந்தன.

1938ம் ஆண்டு, ஜூன் மாதம் 7ம் திகதி காலை 8 மணியளவில் பேதுரு அருப்பேவின் கதவு தட்டப்படுகின்றது.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப் போகும்



**அம்மா** : மகன்! நாளைக்கு டெஸ்டு இருக்கு, போய் நல்லாப் படிடா!
**மகன்** : நீங்க TVயைப் போட்டுக்கிட்டு இருந்தா நான் எப்படி படிக்கிறது?
**அம்மா** : மேல் மாடியில போய்ப் படி. அப்பதான் மண்டையில நல்லா படிப்பு ஏறும்.



**ஆசிரியர்** : தம்பி! அன்பு என்றால் என்ன? காதல் என்றால் என்ன?
**மானவன்** : ஓ இவ்வளவு தானா! நீங்க உங்க மகள் மேல வச்சிருக்கிறது அன்பு, அதையே நான் உங்க மகள் மேல வச்சிருக்கிறது காதல் சார்.

**இ.மனோஜ்,** சொறிக்கல்முனை.



**ஆசிரியர்** : பிள்ளைகளே! பாலும் தேனும் ஓடுகின்ற நாடு எப்படி இருக்கும்?
**மானவர்கள்** : ஒரே ஈயும் எறும்புமாக இருக்கும் டீச்சர்.

**பா.மேரியாழினி,** மூனறாம்பிட்டி.



**காவலாளி** : அரசே! ஓலை வந்திருக்குது.
**அரசர்** : அப்படியா! நான்கைந்து கூலியாட்களைக் கொண்டு பின்னிப் போடச்சொல்லு



**ஆசிரியர்** : என்ன காந்தன்! ஒரு வாரத்துக்குப் பிறகு ஸ்கூலுக்கு வந்திருக்கிறாய்?
**காந்தன்** : இல்ல சார், அடிக்கடி ஒரு இடத்துக்குப் போனா அந்த இடத்துல உனக்கு மதிப்பு இருக்காதுன்னு எங்க அப்பா சொல்லியிருக்காங்க. அது தான் நானும் ஒரு வாரத்துக்குப் பிறகு வந்திருக்கேன் சார்.

**யோ.ஆசாப்,** அமிர்தகழி.



**காதலன்** : இந்த ஏழையை மறந்திட மாட்டியே மாலா!
**காதலி** : சரியாப்போச்சுது போ! இப்படியே சொல்லிச் சொல்லி என்னை ஏமாத்த முடியாது. இன்னைக்கு நீங்க தான் சுண்டலுக்கு காசு கொடுக்கணும்.



**மானேஜர்** : ஏன்யா இப்படி வீட்டுக்குப் போக துடிக்கிறாய்?
**க்ளார்க்** : என் மனைவி சாப்பிடாம எனக்காக காத்துக்கிட்டிருப்பா சார்.
**மானேஜர்** : ஆஹா! இந்தக் காலத்துலயும் இப்படிப்பட்ட ஒரு பெண்ணா? நீ ரொம்ப குடுத்து வச்ச ஆளுப்பா.
**க்ளார்க்** : பின்னே! நான் போய் சமச்சுப் போட்டாதானே அவ சாப்பிடுவா.

**சோ.நிரஞ்சன்,** மறவன்குளம்.



**நீதிபதி** : ஏம்மா! உன் மாமியாரை வேணும்னு தானே கிணத்துல தள்ளிவிட்டாய்?
**குற்றவாளி** : ஐயையோ! இல்லவே இல்லீங்க, வேண்டவே வேணாம்னு தாங்க கிணத்துல தள்ளினேங்க.

**பெ.முத்துலட்சுமி,** தரணிக்குளம்.

**ஒருவர்** : அழுகிய தக்காளி 1கிலோ, அழுகிய கத்தரிக்கா 1/2கிலோ, காய்ந்து போன கீரைக்கட்டு
**கடைக்காரர்** : எதுக்கு எல்லாம் அழுகினதாப் பாத்து வாங்கிறீங்க?
**ஒருவர்** : அப்பதான் என் பொண்டாட்டி என்னை சந்தைக்கு அனுப்பமாட்டா.



**ப.அனுஜா,** கற்குளம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் கடிதம்



மாணவர் விடியலே...

உனக்கு எனது பல கோடி வந்தனங்கள். எம் சமூகம் இன்று உறவிழந்து, உடமையிழந்து நிற்கதியாகிய நிலையிலும் கூட, மாணவச் செல்வங்களின் கல்வி நிலையை எண்ணி தினம் தினம் விம்மி, வெதும்பி அழுகின்றனர். அவ்வாறான எமது அன்புச் சிறார்களுக்கு நீ **"கல்வி"** என்னும் ஆரம்ப நூல் தொடக்கம் **"குடும்பம்"** என்று ஒவ்வொரு மாதமும் வெளிவருகின்றாய். இது எமது மாணவர்களது கல்வியின் தன்னம்பிக்கையை கட்டியெழுப்ப உறுதுணையாக இருக்கின்றது. இது எமக்கு கிடைத்த அருந்தவக் கொடை. நீ மேலும் சிறப்பான ஆக்கங்களுடன் வெளிவர வாழ்த்துகின்றேன்.

**சு.சித்ரா,** மயிலாம்பவெளி

விடியலே! நீ வரும் வரை உனக்காக மாதாமாதம் காத்திருப்பேன். நீ வந்ததும் நான் அளவு கடந்த சந்தோஷமடைவேன். இம்மாத குடும்ப விடியல் சூப்பர்! அடுத்து வரும் தொலைக்காட்சியும் சூப்பராய் இருக்க வாழ்த்துக்கள்! உன் வருகைக்காய் காத்திருப்பேன்.

**த.அனுசியா,** கற்குளம்.

புதுமைகள் பல படைத்து, பல தகவல்களைத் தரும் மாணவர் விடியலே! நீ வாழ்க! அது மட்டுமல்ல பொது அறிவு, பழமொழிகள், சித்திரங்கள், சிரிக்க வைக்கும் பகுதிகள் பல தந்து சிறந்த வழி காட்டும் உனக்கு என் மனமார்ந்த நன்றிகளும், வாழ்த்துக்களும்.

**சியாளினி,** சந்திவெளி.

21ம் தலைப்பாக குடும்பம் ஊடாக நீ என்னை குதூகலிக்கச் செய்தாய். உனது ஆக்கம் எல்லாம் என் மனதில் ஆழ்ந்து பதிந்துள்ளது. இம்மாத தொலைக்காட்சி என்ற தலைப்பு இதழ் ஜொலிக்கவும், JRS மேலும் வளரவும் என் இனிய நல் வாழ்த்துக்கள்.

**பு.டலஞ்சியா,** ஆசிகுளம்.

மாணவர் விடியலுக்கு அன்பான வாழ்த்துக்கள்!

எழுதத் தூண்டும் மாணவர் விடியலே! உன் பணியே பணி. மாணவர்களின் அறிவைத் தூண்டி, ஆசிரியர்களின் அறிவை பெருக்கி, வாசகர்களின் ஆவலைத் தூண்டி உள்ளங்களை மகிழ்வித்த உனக்கு என் இனிய வாழ்த்துக்கள். என்றும் உன் பணி தொடரவும், நிலைத்திடவும் மனம் நிறைந்து கூறுகிறேன் வாழ்க! வாழ்க! என்றும் நீ வாழ்க!

**சூ.ஜெசிந்தராணி,** கல்மடு.

ஒவ்வொரு விடியல் இதழினையும் தொடர்ந்து வாசித்தும், அதற்கு ஆக்கங்களையும் அனுப்பி வருகின்றேன். ஆகையால் எனக்கும் மாணவர் விடியல் இதழினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நஜாத்,** கிண்ணியா.

விடியலே! உன் வருகைக்காய் எமது பிள்ளைகளும் நாமும் காத்திருப்போம். நீ வந்தவுடன் எம் பிள்ளைகளிடம் தோன்றும் மகிழ்ச்சியை பார்த்து நாமும் நிறைவடைகின்றோம். எம் அனைவரையும் கவரும் மாணவர் விடியலே! இதுவரை நீ தந்த ஆக்கங்கள் யாவும் சிறப்பாய் இருந்தன. இனி வரும் இதழ்களும் சிறப்பாய் அமைய பிரார்த்திக்கின்றோம். உன் வருகைக்காய் காத்திருப்போம்.

**பெற்றோர்கள்,** கற்குளம்

மாதம் ஒரு முறை விடியலாக விடியும் நீ என் மனதை ஆழமாய் தொட்டுவிட்டாய். உன்னை பார்த்தவுடன் அமைதியாய் இருக்கும் கைகள் கூட கவிதை எழுதத் துடிக்கும். நீ எல்லோர் நெஞ்சத்திலும் அறிவொளி வீச என் நெஞ்சம் கனிந்த வாழ்த்துக்கள்.

**ச.வதனி,** கல்லடி.

## எம் விழிக்கு விருந்தாகுவாய்..

திக்கெட்டும் நிகழ்வுகளை
தீன் சுவையுடன் தினமும் தருவது
தொலைக்காட்சி!
ஆடல் பாடல் அற்புதங்கள் பல
ஆயிரம் ஆயிரமாய்
அவனியில் நமக்குத் தருவது
தொலைக்காட்சி!
நாங்கள் அறிந்திடா
நல் அறிவினை புகட்டிடும்
நல்லதொரு வெகுசன தொடர்பு சாதனம்
தொலைக்காட்சி!
உலக நிகழ்வுகளை எம் விழிக்கு
நல்ல விருந்தாக தருவது
தொலைக்காட்சி!
இலகுவில் புரியும் வண்ணம்
இன்ப நிகழ்ச்சிகளை
இதயத்தில் பதியும் வண்ணம் எமக்களிப்பது
தொலைக்காட்சி!

**நீ.ரேணுகா,** கணேசபுரம்.

எதையும் உடனே செய்து முடித்துவிடுங்கள்.
ஒதுக்கி வைத்தால், சுமை கூடி, ஒன்றையுமே செய்ய முடியாமல் போய்விடும்.



ராய்ட்டர்ஸ் (Reuters) என்ற செய்தி நிறுவனம் உள்ள நாடு - இங்கிலாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுக்கள்

CONGRATULATIONS!

**(கவிதை, ஜோக்ஸ், கட்டுரை, கதை விடுகதை, பொதுஅறிவு, கடிதம் எழுதியவர்கள்)**

**கோவிற்குளம்** - சத்தியா, சர்மினி, நிரோஷா, கீர்த்திகா, துஷேந்தினி, சுதர்சன், தர்சிகன், சிந்துஜன்,

**வீடத்தல் தீவு** - சந்திரகலா, ரோகினி, மயூரி, ஜெகா, கவிதா, டொறின், மரிஸ்ரெலா, டனிலா, சுயான், நர்மதா, நிஷாந்தி, ஜெனனி, ரேக்கா, மேரிலக்சினி, வினுசியா, அஜித் எப்சிபா, கோபிகான், காமல்மெரினா, சூரியகுமார், சுலைக்சன்.

**சாம்பல் தீவு** - பிரவீனா, ரேவதி, தனு, சந்தானலெட்சுமி, கிருஜன், காந்தரூபி, சதீஸ்வரன், பவானி, நிதுஷன்.

**ஆச்சிபுரம்** - தங்கா, தர்மேகா, சிலோஜினி, சோபிகா.

**ஆசிகுளம்** - கஜேந்தினி, நவநீதன், வேல்விழி, டலஞ்சியா, கயல்விழி, மோகனாமதி, நிவேதன், கபிலன், டர்சினி, லோஜனா, நிதர்சன், யசோதரன், தமிழ்ச்செல்வி, இன்பவதனி, திலகரூபி.

**வேப்பவெட்டுவான்** - வதனி, ரதிகலா, கௌரி

**சந்திவெளி** - சியாளினி, அன்னலெட்சுமி

**அச்சுவேலி** - கிருபா, டன்சிமேரி

**முருகனூர்** - நிஷா

**ட்ச்பார்** - சஜன், வதனி, வாணி.

**மூதூர்** - வினித்திரா, அஜித்குமார்

**கடலூர்** - சனோஜினி

**கிண்ணியா** - சுகி, நஜாத்

**சொறிக்கல்முனை** - டயஸ், மனோஜ், இருதயம்

**பாலையடித்தோணா** - நிசாலினி, விஜயலதா, மதுஜினி

**கந்தளாய்** - ஹர்சனா

**தம்பலகாமம்** - விஜி, சஜந்தா, சுபாஜினி, தயாமதி, சுகோதா.

**பேசாலை** - சியானா

**இருதயபுரம்** - நிரஞ்சலா, லிங்கேஸ்வரி

**கற்கிடந்தகுளம்** - சுமி

**மயிலாம்பவெளி** - சித்ரா

**களிமோட்டை** - ஜென்சி

**கல்முடு** - ஜெசிந்தராணி

**அமிர்தகழி** - அபிதரன், சஜந்திக்கா, ஆசாப்.

**சாளம்பன்** - கிறிஸ்ரன், நேர்த்திராஜ்

**வவுனியா** - தர்மினி, தனுரா.

**மணியர்குளம்** - சிந்துஜன், டனுசன், டனுஷா, சுலக்ஷன்.

**சமயபுரம்** - அகஸ்ரா, ஞானசவுந்தரி.

**பிள்ளையார்பிட்டி** - லங்கேஸ்வரன்.

**கற்குளம்** - அனுசியா, சங்கீதா, அனுஜா, கிருஷ்ணகுமாரி, கலையரசி, அனுந்துஜன், சுகன்யா, அனுஜா.

**இராஜேந்திரங்குளம்** - மதுஷி, சனோஜன், வினுஜன்.

**கீடாச்சூரி** - மகேஸ்வரி, நிறஞ்சினி, யசோர்த்தனா, சங்கீதா, தமதரன், ஜலந்தன், தனஞ்செயன், நிரஞ்சன், தயாளினி, வாசுகி.

**ஜீவநகர்** - வினோ, மனோரஞ்சினி, பிரியதர்சினி

**வாழ்க்கைப்பெற்றான் கண்டல்** - ஆன்டிலக்ஷி, அனுசிறோஜன், ஜோய்ஜசின்ரன், கலிஸ்ரா.

**பெரியமுறிப்பு** - சந்திரவதனா, சுனித்தா, பிரதீபன், சுலைக்சன், நிரோஜன், யூலின் அருள்நாத்.

**தரணிக்குளம்** - பவித்திரா, கீர்த்தனா, சங்கீதா, முத்துலட்சுமி, ஹேதீஸ்வரன், மனோஜன்.

**பராமபுரம்** - ஐங்கரன், யோன்சி, விழித்திரன், பானுமதி.

**விபுலானந்தபுரம்** - டனுஸ்ற்றன், டனுசியா, சுகந்தினி, டிலக்சலா, சாந்தினி, சந்திரகலா, ரகுவரன், விஜெந்தினி.

**கணேசபுரம்** - கீர்த்திகா, ரேணுகா, றஜீபன், சுபப்பிரியா, கனுசிகா, கஜீபன், றம்யா, சத்யா, கர்மிகா, கம்சிகா, பிரதீஸ், அஜந்தினி, ராதிகா, றெக்மன்ஜெனோஜ்,

**மூன்றாம்பிட்டி** - மேரியாழினி, மேரிஅனஸ்ரீன், மேகலை, தயாளினி, டயாளினி, கிருபாகரன், பவுஸ்தீனா.

கதை, கவிதை, கட்டுரை என எதை வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் எழுதும் முன் நீங்கள் எதை எழுதப் போகின்றீர்களோ. அதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நீங்கள் எழுதுவதை தங்கு தடை இல்லாமல். சொல்ல விரும்பியதை வாசிப்பவருக்குத் தெளிவாகப் புரியும் படி எழுத வேண்டும்.

மனதை ஒருமுகப்படுத்தி ஆழ்ந்து சிந்திக்கப் பழக வேண்டும். எழுதும் முன்பு. எழுதுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இரைச்சலும் குழப்பமும். பிரச்சனைகளும் ஆரவாரமும் இல்லாத இடத்தில் அமைதியாக இருந்து எழுதப் பழக வேண்டும்.

எழுத்தாளர்கள் எந்த மையில் எழுதுகின்றார்கள்? இதற்கு வேடிக்கையாக. விளையாட்டாக ஒரு பதில் சொல்லுகிறார்கள்! சிலர் பெருமையில் எழுதுகின்றார்கள். இன்னும் சிலர் அறியாமையில். தெரியாமையில். பொறாமையில் எழுதுகின்றார்கள். சிலர் மட்டுமே. புலமையில் எழுதுகின்றார்களாம்.

எது எப்படியோ நாம் புலமையைக் கொண்டு எழுதுவோம்.



வீரசிவாஜியின் தாயார் பெயர் - ஜீஜாபாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரமும் கைப்பழக்கம்



த. சதீஸ்வரன்
சாம்பல் தீவு




கா. சுபாஜினி
தம்பலகாமம்



S. வாணி
கல்லடி



ப. அற்புதராஜ்
மன்னார்



செ. ரஜீபா
கணேசபுரம்



கி. கிரிஸ்ரோபர்



ந. நர்மதா
சமயபுரம்



R. சர்மிளா
மணியார்குளம்



த. தனுசியா
வன்னிகுளம்



T. விமாலினி
பெரியமுறிப்பு




ந. மாலினி
கணேசபுரம்



தஅ. அஜதீபன்
ஸ்ரீராமபுரம்



ரூ. அனிதா
கல்குடா



மு. தர்மிகா
சமயபுரம்



டேவிட் நிக்ஷன்
கும்புறுபிட்டி



மு. தர்ஷிகா
சமயபுரம்



S. பிரவீனா
சாம்பல் தீவு



கீர்த்திக்கா
பிள்ளையார்பிட்டி



R. மக்சிமிலன்
சாளம்பன்



Y. றேச்சல் நிலக்சனா
பெரியகுளம்



ம. நிதர்சன்
நிலாவெளி



சுமித்ரா
சீனன்குடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடம் பெயர்ந்த குழந்தைகளுக்கான
கல்விப் பணி - திருகோணமலை



திராய்மடு வீட்டு அடிக்கல் நாட்டுவிழா



வாழைச்சேனை முகாம் வாகரை இடம்பெயர்ந்த
குழந்தைகளுக்கான ஒளிவிழா



தெற்காசிய இயக்குனர் P.S. அமல்ராஜ்
மஞ்சம் தொடுவாய் முகாம் மக்களை சந்தித்த போது




சர்வதேச ஆசிரியர் தினம் - மட்டக்களப்பு



சூரியடி பெற்றோர் மாணவர் ஒன்று கூடல்



JRS விஷேட தேவை குழந்தைகள்
இல்லத் திறப்பு விழா - காயங்கேணி



சுனாமி புலமைப் பரிசில் மாணவர்கள், பெற்றோர்
ஒன்றுகூடல் - மட்டக்களப்பு

From :
**Jesuit Refugee Service**
**31, Clifford Place, Colombo 04.**
**Tel: 2504384**

JRS

To:
JSOP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Transcend Printers (Pvt) Ltd. Tel/Fax: 2331404